# 6

# இறைக் கொள்கையும் அரச நிதியும்

## 6.1 பொதுநோக்கு

வரவு செலவுத்திட்டம் 2011இல் அறிவிக்கப்பட்ட **இறைக் கொள்கை உபாயங்கள், உயர்ந்த பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கக் கூடிய முதலீடுகளை ஊக்குவிக்கின்ற வேளையில் இறைத்திரட்சி செயன்முறைகளுக்கான கடப்பாடுகளைப் பேணிக் கொள்வதனையும் குறிக்கோளாகக் கொண்டு தயாரிக்கப்பட்டன.** வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை 2010இன் மொ.உ.உற்பத்தியின் 8 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 6.8 சதவீதத்திற்கு குறைப்பதனை இலக்காகக் கொண்டிருந்தது. திரண்ட இறைப்பற்றாக்குறையினை 2011ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் இலக்கிடப்பட்ட மட்டத்திற்குள் கட்டுப்படுத்தும் பொருட்டு அரசிறைகளையும் கொடைகளையும் மொ.உ.உற்பத்தியின் 15.6 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கும் மீண்டெழும் செலவினத்தினை மொ.உ.உற்பத்தியின் 16.1 சதவீதத்தில் கட்டுப்படுத்துகின்ற வேளையில் மூலதனத்தினையும் தேறிய கடன் வழங்கலையும் மொ.உ.உற்பத்தியின் 6.4 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டது.

**2011இல் திரண்ட இறைப் பற்றாக்குறை மொ.உ.உற்பத்தியில் 6.9 சதவீதமாக விளங்கி, ஆரம்ப வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட பற்றாக்குறையிலும் பார்க்க சிறிதளவு உயர்வானதாக இருந்தது.** வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க மொத்த அரசிறையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்ட போதும், மீண்டெழும் செலவினத்தில் மிதமானதொரு தன்மை காணப்பட்ட வேளையில், அரச முதலீடுகள் மொ.உ.உற்பத்தியின் 6 சதவீதத்தில் பேணப்பட்டமையானது திரண்ட பற்றாக்குறையினை ஆரம்ப வரவு செலவுத்திட்டத்திற்கு அணித்தாகப் பேணுவதனை இயலச் செய்தது. முக்கிய வரிச் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட போதும் வரிச் சேகரிப்பில் காணப்பட்ட பின்னடைவிற்கு சில வரி மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதில் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் மெதுவாக இருந்தமையும் வரி வீதங்களின் குறைப்பும் பன்னாட்டுச் சந்தைகளில் காணப்பட்ட உயர்வுகளில் இருந்து உள்நாட்டுச் சந்தைகளின் மீதான அழுத்தத்தினைக் குறைப்பதற்காக இவ்வாண்டுப் பகுதியில் வழங்கப்பட்ட விலக்கல்களும் பெருமளவிற்குக் காரணங்களாக அமைந்தன.

## 6.2 இறைக் கொள்கைப் போக்கும் வழிமுறைகளும்

**2011இற்கான வரவு செலவுத்திட்டத்திலுள்ள முக்கியமான இறைக் குறிகாட்டிகள், நடுத்தர கால பேரண்ட இறைக் கட்டமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள இலக்குகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் நிர்ணயிக்கப்பட்டன.** இதற்கமைய, 2011ஆம் ஆண்டிற்கான திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது 2010இன் மொ.உ.உற்பத்தியின் 8 சதவீதத்திலிருந்து 6.8 சதவீதத்திற்கு மேலும் குறைக்கப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதையொத்த குறைப்பு, நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2010இன் மொ.உ.உற்பத்தியின் 2.1 சதவீதத்திலிருந்து 2011இல் மொ.உ.உற்பத்தியின் 0.8 சதவீதத்திற்கும் ஆரம்ப பற்றாக்குறை 2010இன் மொ.உ.உற்பத்தியின் 1.7 சதவீதத்திலிருந்து 2011இல் மொ.உ.உற்பத்தியின் 1.3 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்பட்டது. மொ.உ.உற்பத்திக்கான படுகடன் விகிதம் 2010இன் 81.9 சதவீதத்திலிருந்து 2011இல் 79.8 சதவீதத்திற்கு ஏற்பட்ட குறைப்பும் இறைத்திரட்சி செயன்முறையில் எதிர்பார்க்கப்பட்டதொன்றே. இறைத்துறையில் காணப்பட்ட இச்சாதகமான அபிவிருத்திகள் உயர்வடைந்த அரசிறை மற்றும் மீண்டெழும் செலவினம் என்பனவற்றின் மூலம் எய்தப்பட்ட வேளையில், முதலீடுகள், உபாய ரீதியில் முக்கியத்துவம்

வாய்ந்த உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களில் எதிர்பார்க்கப்படும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவக்கூடிய மட்டத்தில் பேணப்பட்டன.

**அரசிறைப் பக்கத்தில், அரசிறைச் சேகரிப்புக்களை உயர்த்துகின்ற அதேவேளையில் முதலீட்டாளர் சிநேகபூர்வ சூழலை உருவாக்கும் இறுதி இலக்குடன் வரி முறைமைகளை இலகுபடுத்தி வரித் தளத்தினை விரிவாக்குகின்ற நோக்குடன் பாரிய செயல் விளைவுகளைக் கொண்ட சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.** சீர்திருத்தங்கள் தொல்லை தரும் அநேக வரிகளின் நீக்கம், வரி வீதங்களின் குறைப்பு, வரிப் பிரிவுகள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டமை, அதேபோன்று வரித் தளத்தின் விரிவாக்கம் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. தாழ்ந்ததும் இலகுவானதுமான வரி முறைமை வரி செலுத்தும் இணங்குவிப்புக்களை அதிகரித்து உயர்ந்த வரிச் சேகரிப்புக்களுக்கு வசதியளிக்கின்ற வேளையில், உயர்ந்த பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் விதத்தில் சலுகை வட்டி வீதங்கள், விலக்கல்கள் மற்றும் வரி விடுப்பு போன்ற பல்வேறுபட்ட வரி ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலம் தெரிந்தெடுக்கப்பட்ட துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ள ஊக்குவிக்கப்பட்டது.

**வரித் தளத்தினை விரிவாக்குகின்ற நோக்குடனும் வரி செலுத்தும் இணங்குவிப்புக்களை மேம்படுத்தும் விதத்திலும் வருமான வரி அமைப்பினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** 2011 ஏப்பிறல் 1ஆம் நாளிலிருந்து தனிநபர் வருமான வரிக்கான உயர்ந்தபட்ச வரி வீதம் 35 சதவீதத்திலிருந்து 24 சதவீதத்திற்கு குறைக்கப்பட்ட வேளையில் வரியற்ற கீழ் மட்டம் ரூ.300,000இலிருந்து ரூ.500,000 இற்கு உயர்த்தப்பட்டது. மேலும், தொழிலிலிருந்தான வருமானத்தினை மாத்திரம் பெறுபவர்களைப் பொறுத்தவரை உழைக்கும் பொழுதே செலுத்தும் வரி இறுதி வரியாக்கப்பட்டதுடன் கீழ் மட்டம் ரூ.600,000 இற்கு உயர்த்தப்பட்டது. இதுவரை வரி விதிக்கப்படாதிருந்த அரச துறை ஊழியர்களின் ஊதியங்கள் வரி விதிப்பிற்குள்ளாக்கப்பட்டதன் விளைவாக வரித் தளம் விரிவடைந்தது. 40 சதவீதத்தில் வரி விதிக்கப்பட்டிருந்த குடிவகைகளின் விற்பனை மற்றும் தயாரிப்பு அல்லது இறக்குமதிகளிலிருந்து மற்றும் புகையிலை உற்பத்திகளிலிருந்து கிடைக்கும் இலாபம் அல்லது வருமானம் தவிர்ந்தவற்றிற்கான கம்பனியின் வருமான வரி வீதம் 35 சதவீதத்திலிருந்து 28 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. மேலும் கட்டடவாக்கம், சுற்றுலா, மற்றும் தகுதியான ஏற்றுமதிகள் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட துறைகளுக்கும் ரூ.5 மில்லியனை விஞ்சாத வரியிடத்தக்க வருமானத்தைக் கொண்ட கம்பனிகளுக்கும் ஏற்புடைத்தான சலுகை வரி வீதங்கள் 15 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டன. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு உதவும் விதத்தில் பொருளாதார பணிக் கட்டணத்திற்கு ஏற்புடைத்தான கீழ்மட்ட தொகை காலாண்டிற்கு ரூ.7.5 மில்லியனிலிருந்து காலாண்டொன்றிற்கு ரூ.25 மில்லியனுக்கு உயர்த்தப்பட்ட வேளையில் வரி வீத அமைப்பானது இலகுபடுத்தப்பட்டதுடன், பொருளாதார பணிக் கட்டணத்திற்கான காலாண்டு கொடுப்பனவுகள் தொடர்பான கூற்றுக்களை வருடாந்தம் கோப்பிடுவது வரி இணங்குவிப்புக்களை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டிருந்தது.

**பல்வேறுபட்ட வரி வீத அமைப்பு முறைக்குப் பதிலாக 12 சதவீதம் கொண்ட தனியொரு வரி வீதம் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் பெறுமதிசேர் வரி முறைமை இலகுபடுத்தப்பட்டது.** மேலும், வெளியீட்டு வரியின் 85 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த உள்ளீட்டு பெறுமதிசேர் வரியின் மீளளிப்பு 2011 சனவரி 01ஆம் நாளிலிருந்து 100 சதவீதத்திற்கு விரிவாக்கப்பட்டதுடன், 2010 திசெம்பர் 31ஆம் நாளன்று உள்ளவாறான வெளிநின்ற ஈர்த்துக் கொள்ளப்படாத உள்ளீட்டு கொடுகடனைக் கட்டுப்படுத்துவதற்காக புதிய எதிரீடு செய்யும் பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் புடவை அனுமதிப் பங்குச் சபையினாலும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினாலும் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டு இடைநிறுத்தப்பட்ட பெறுமதிசேர் வரித் திட்டம் உள்நாட்டரசிறைத் திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதுடன் இது ஏற்றுமதியாளர்களுக்கான பொருட்களை வழங்குபவர்களையும் ஏற்றுமதியாளர்களுக்கான பெறுமதிகூட்டல் பணிகளை வழங்குபவர்களையும் அதேபோன்று சிறப்பு செயற்றிட்டங்களுக்கான வழங்குநர்களையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் விரிவாக்கப்பட்டது. நிதியியல் பணிகள் மீது ஏற்புடைத்தான பெறுமதிசேர் வரியினை 20 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு குறைத்தமையின் மூலமும் கம்பனி வருமான வரிகளை 35 சதவீதத்திலிருந்து 28 சதவீதத்திற்கு குறைத்தமையின் மூலமும் கிடைத்த வரிச் சேமிப்புக்களை, சலுகை வட்டி வீதங்களில் குறிப்பிட்ட துறைகளுக்கு நீண்ட காலக் கடன்களை வழங்குவதற்குப் பயன்படுத்தும் விதத்தில் தொடர்பான நிதியியல் நிறுவனங்களில் பேணப்படுகின்ற சிறப்பு நிதியத்திற்கு அதாவது, முதலீட்டு நிதியக் கணக்கிற்கு அனுப்பி வைக்குமாறு நிதியியல் நிறுவனங்கள் அறிவுறுத்தப்பட்டன.

**2011 இற்கான வரவு செலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கியமானதொரு கொள்கை மாற்றம் யாதெனில், மாகாண சபைகளினால் சேகரிக்கப்பட்ட மொத்தப் புரள்வு வரி ஒழிக்கப்பட்டமையும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளை உள்ளடக்கத்தக்க விதத்தில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் செயற்பரப்பு விரிவாக்கப்பட்டமையுமேயாகும்.** மொத்தப் புரள்வு வரி ஒழிக்கப்பட்டமையின் காரணமாக தோன்றும் மாகாண சபைகளின் வருமான இழப்பினை ஈடுசெய்வதற்காக தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து சேகரிக்கப்பட்ட அரசிறையில் மூன்றிலொரு பங்கு மத்திய அரசாங்கத்திலிருந்து மாகாண சபைகளுக்கு மாற்றல் செய்யப்பட வேண்டியிருந்தது. மேலும், தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரி வீதமானது செலுத்தத்தக்க

மொத்தப் புரள்வின் 3 சதவீதத்திலிருந்து 2 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. விநியோகத்தர்களுக்காக மொத்தப் புரள்வில் நான்கில் மூன்று பங்கிற்கும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனையாளர்களுக்கு மொத்தப் புரள்வில் அரைப் பங்கிற்கும் நாட்டைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. மேலும், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக்கு ஏற்புடைத்தான கீழ்மட்டம் காலாண்டிற்கு ரூ.650,000 இலிருந்து ரூ.500,000 இற்கு குறைக்கப்பட்டதுடன் சுற்றுலா விடுதி, விருந்தினர் இல்லம், அல்லது உணவகம், உள்ளூரில் கொள்வனவு செய்யப்பட்ட வேளாண்மை உற்பத்திகளின் பதனிடல், கல்விப் பணிகளை வழங்குதல் மற்றும் மனித வளங்களை வழங்குதல் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் கீழ்மட்டம் காலாண்டிற்கு ரூ.25 மில்லியனுக்கு உயர்த்தப்பட்டது.

**அநேக தொல்லை தரும் வரிகளை ஒழித்தமையின் மூலமும், ஒரு கைத்தொழிலுள்ள பல்வேறு வரிகளை தனியொரு வரிக்குள் ஒருங்கிணைத்தமையின் மூலமும் வரி முறைமை இலகுபடுத்தப்பட்டது.** வரி அமைப்பினை இலகுபடுத்துவதற்காக சமூக பொறுப்பாண்மைத் தீர்வை, பிரதேச உட்கட்டமைப்பு அபிவிருத்தித் தீர்வை மற்றும் வரவு வரி என்பன ஒழிக்கப்பட்டன. மேலும், தொலைத் தொடர்பூட்டல் பணிகளுக்கு ஏற்புடைத்தாகவிருந்த செலூலர் செல்லிட வாடிக்கையாளர் தீர்வை, பெறுமதிசேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு தீர்வை போன்றவற்றிற்கும் பதிலாக 20 சதவீதம் கொண்ட உள்ளடக்க தொலைத் தொடர்பூட்டல் தீர்வையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

**உள்நாட்டு விலை அழுத்தங்களைக் குறைப்பதற்காக, பன்னாட்டு விலை உயர்வுகளினால் பாதிக்கப்பட்ட அநேக பண்டங்களின் மீதான வரிகளை அரசாங்கம் திருத்தியது.** பெற்றோலிய இறக்குமதிகள் மீதான பகுதியளவிலான தளர்த்தல்கள் 2011 சனவரியில் அதிகரிக்கப்பட்டதுடன் 2011 ஏப்பிறலிலிருந்து முழுமையான சுங்கத் தீர்வைத் தளர்த்தல்கள் வழங்கப்பட்டதுடன் பெற்றோலிய இறக்குமதிகள் மீது ஏற்புடைத்தான லீற்றர் ஒன்றிற்கான ரூ.25 கொண்ட உற்பத்தி வரியும் 5 சதவீதமான துறைமுகம் மற்றும் வானூர்தி நிலையத் தீர்வையும் தொடர்ந்தும் காணப்பட்டன. 2011இல் டீசலுக்கு முழுமையான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டதுடன் டீசலின் இறக்குமதி மீது லீற்றரொன்றிற்கு ரூ.2.50 கொண்ட உற்பத்தி வரியும் 5 சதவீதமான துறைமுக மற்றும் வானூர்தி நிலைய வரிகளும் ஏற்புடைத்தானவையாக இருந்தன. பால்மாவைப் பொறுத்தவரை, 2011 சனவரி பிற்பகுதியிலிருந்து முழுமையான சுங்கத் தீர்வைத் தளர்த்தல்கள் வழங்கப்பட்டன. உருளைக்கிழங்கு, வெங்காயம், பயறு மற்றும் மிளகாய் என்பனவற்றின் விலைகளை உள்ளூர் சந்தையில் உறுதிப்படுத்துவதற்காக அவற்றின் மீதான சிறப்புப் பண்டத் தீர்வைக்கு திருத்தங்கள் செய்யப்பட்ட வேளையில் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக தினை வகை, உழுந்து மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட வாசனைத்திரவியங்களின் மீது சிறப்புப் பண்டத் தீர்வை விதிக்கப்பட்டது.

**தனியார் துறை முதலீடுகளை ஊக்குவிப்பதற்காகவும் உயர் வளர்ச்சி உத்வேகத்திற்கு ஆதரவளிப்பதற்காக வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதற்காகவும் வரி ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டன.** சமமான வாய்ப்புக்களை உருவாக்கும் பொருட்டு முதலீட்டுச் சபையினால் உபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததென அடையாளம் காணப்பட்ட சில செயற்றிட்டங்கள் மற்றும் 2011ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க உபாய அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் (திருத்தப்பட்ட) சட்டத்தின் கீழ் அமைச்சரவையினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் தவிர்ந்த, அனைத்து ஊக்குவிப்புக்களும் உள்நாட்டரசு இறைச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. மீன்பிடி, வேளாண்மை விதைகள் அல்லது நடுகைப் பொருட்களின் உற்பத்தி என்பனவற்றில் செய்யப்படும் முதலீடுகளுக்கு ஐந்தாண்டு வரி விடுப்பு வழங்கப்பட்டதுடன் ரூ.50 மில்லியன்களுக்கும் கூடுதலான முதலீடுகளுடன் கூடிய புதிய நடவடிக்கைகளுக்கு மூன்றாண்டு வரி விடுப்பு வழங்கப்பட்டது. ஐ.அ.டொலர் 3 மில்லியனுக்கு கூடுதலான முதலீடுகள் கொண்ட கூடிய புதிய முயற்சிகளுக்கு ஏழு ஆண்டுகால வரி விடுப்பும் வழங்கப்பட்டன. மேலும், புதிய முதலீடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு 2011 ஏப்பிறல் 1ஆம் நாளுக்குப் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட பொறிகள் மற்றும் பொறித் தொகுதிகளின் மீது மூன்றிலொரு பங்கு தேய்மானப்படியும் 2011 ஏப்பிறல் 1ஆம் நாளுக்குப் பின்னர் நிருமாணிக்கப்பட்ட தகுதி பெற்ற கட்டடங்களின் மீது 10 சதவீத தேய்மானப்படியும் அதேபோன்று ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மீதான செலவினத்தில் 200 சதவீதமும் மதிப்பிடப்பட்ட வருமானமாகப் பெறப்பட்ட தொகையிலிருந்து கழிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

**வரி நிருவாகத்தினை மேம்படுத்துவதற்கு முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.** உள்நாட்டரசிறைத் திணைக்களத்திலுள்ள முறையீட்டு செயன்முறைகளை விரைவுபடுத்துவதற்காகவும், முன்னைய முறைகளின் கீழ் நிலவிய பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்காகவும் 2011ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க வரி முறையீட்டு ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் வரி முறையீட்டு ஆணைக்குழுவொன்று ஏற்படுத்தப்பட்டது. சட்டத்தின் ஏற்பாடுகளை தெளிவுபடுத்துவதற்காக வரிச் சட்டங்களை தெளிவுபடுத்துவதற்கும் வரிச் சட்டங்களின் தெளிவுபடுத்தல்கள் தொடர்பாக ஒருமித்த தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக தேவையான விதத்தில் தேவையான பொழுது வழிகாட்டல்களையும் அறிவுறுத்தல்களையும் வழங்குவதற்காகவும் வரிச்சட்ட தெளிவுபடுத்தல் குழுவொன்றும் ஏற்படுத்தப்பட்டது. செலுத்தத் தவறிய வரிகளைக் கையாள்வதற்காக வரிகள் செலுத்தத் தவறுகை (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் தனியானதொரு வரி செலுத்தத்தவறுகைப் பிரிவொன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது. மேலும், வரிச் சேகரிப்பு செயன்முறைகளை

தன்னியக்கப்படுத்துவதற்காக இறை முகாமைத்துவ சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசிறை முகவராண்மைகளில் நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. வரி இணங்குவிப்புக்களை அதிகரிப்பதற்கும் வரி செலுத்துவதற்கும் பொறுப்புடையவர்களாக இருந்தும் தற்பொழுது பதிவு செய்யாதிருப்பவர்கள் வரி வலையமைப்பிற்குள் கொண்டு வருவதற்குமாக அரசிறை முகவராண்மைகளினால் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**செலவினத்தின் மீது பல்வேறு கொள்கை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.** அனைத்து அரச துறை ஊழியர்களுக்கும் 2011 சனவரியிலிருந்து அவர்களது அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவீதத்திற்குச் சமமான சிறப்புப் படியொன்று வழங்கப்பட்டது. மேலும், உயர் அலுவலர் அல்லாத தரத்திலுள்ள அரச துறை ஊழியர்களின் வாழ்க்கைச் செலவுப் படி 2011 சனவரி 1ஆம் நாளிலிருந்தும் உயர் அலுவலர் தரத்திலுள்ளவர்களுக்கான அத்தகைய படி 2011 யூலை 1ஆம் நாளிலிருந்தும் மாதமொன்றிற்கு ரூ.600 இனால் ரூ.5,850 இற்கு அதிகரிக்கப்பட்டது. ஓய்வூதியம் பெறுவோரைப் பொறுத்தவரையில் வாழ்க்கைச் செலவுப் படி 2011 சனவரியிலிருந்து மாதமொன்றிற்கு ரூ.300 இனால் ரூ.2,675 இற்கும் 2004 சனவரி 01 இற்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களைப் பொறுத்தவரை மாதாந்த ஓய்வூதியம் ரூ.750 இனாலும் 2004 சனவரி 1 இலிருந்து 2005 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் ஓய்வு பெற்றவர்களுக்கு 2011 யூலை 01ஆம் நாளிலிருந்து ரூ.250 இனாலும் அதிகரிக்கப்பட்டது. இதுவரை நெல் துறைக்கு மட்டுப்பட்டிருந்த வளமாக்கி உதவுதொகை அனைத்துப் பயிர்களுக்கும் விரிவாக்கப்பட்டது. நெல் துறைக்கான 50 கி.கிறாம் வளமாக்கிப் பெறுமதியின் உதவுதொகை வழங்கப்பட்ட விலை ரூ.350இல் பேணப்பட்ட வேளையில் மற்றைய அனைத்துப் பயிர்களுக்குமான உதவுதொகை வழங்கப்பட்ட கலக்கப்படாத வளமாக்கியின் 50 கி.கிறாம் பொதியின் விலை ரூ.1,200 ஆகவும் கலக்கப்பட்ட வளமாக்கியின் 50 கி.கிறாம் பொதியின் விலை ரூ.1,300 ஆகவும் காணப்பட்டது.

**உட்கட்டமைப்பில் செய்யப்படும் முதலீடுகள் நீடித்திருக்கக் கூடியதும் அனைத்தையுமுள்ளடக்கியதுமான பொருளாதார வளர்ச்சிக்கு மிக இன்றியமையாதது என்பதனை அங்கீகரிக்கின்ற விதத்தில், அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் கவனம் பல்வேறு உபாயம் மிக்க உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலை விரைவுபடுத்துவதன் மீது குவிந்திருந்த வேளையில் கூடியளவிற்கு சமநிலையான பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்தும் விதத்தில் பிரதேச உட்கட்டமைப்பின் மீது முதலீடுகளையும் மேற்கொண்டது.** தேசிய, மாகாண மற்றும் கிராமிய மட்டங்களில் வீதி வலைமைப்பினை அபிவிருத்தி செய்வதற்காக குறிப்பிடத்தக்கதொரு முதலீடு மேற்கொள்ளப்பட்டது. “கமநகும”, “மகநகு” மற்றும் “வடக்கின் வசந்தம்” ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வீதிகளை தரமுயர்த்துவதற்காகவும் ஏனைய உட்கட்டமைப்புக்களை மேம்படுத்துவதற்காகவும் பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. துறைமுகங்களின் அபிவிருத்தி, வலுத் துறையின் இயலளவு விரிவாக்கம், கிராமிய மின்னூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் அதேபோன்று நீர்வழங்கலை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டங்கள் மற்றும் நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்தல் என்பன இவ்வாண்டுப் பகுதியில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன.

**அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் செயலாற்றத்தினை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் பல்வேறு கொள்கை வழிமுறைகளை மேற்கொண்டது.** அரசிற்குச்

**அட்டவணை 6.1 அரசிறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பு**

| விடயம் | 2010 | 2011 ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 2011 தற்காலிக மானவை | 2012 ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|
| | ரூ.மில்லியன் | | | |
| **மொத்த அரசிறை மற்றும் கொடைகள்** | **834,188** | **985,920** | **949,917** | **1,126,081** |
| மொத்த அரசிறை | 817,279 | 963,320 | 934,776 | 1,106,081 |
| வரி அரசிறை | 724,747 | 861,943 | 812,611 | 1,000,559 |
| வரியல்லா அரசிறை | 92,532 | 101,377 | 122,166 | 105,522 |
| கொடைகள் | 16,909 | 22,600 | 15,141 | 20,000 |
| **மீள்கொடுப்பனவைக்கழித்த செலவினமும் கடன் வழங்களும்** | **1,280,205** | **1,419,664** | **1,400,097** | **1,594,946** |
| நடைமுறை | 937,094 | 1,017,155 | 1,006,633 | 1,107,902 |
| மூலதனமும் தேறிய கடன் வழங்கல்களும் | 343,111 | 402,509 | 393,465 | 487,044 |
| இதில் அரச முதலீடு | 356,519 | 413,546 | 407,488 | 497,465 |
| **நடைமுறைக்கணக்கு மிகை(+)/பற்றாக்குறை (-)** | **-119,815** | **-53,835** | **-71,856** | **-1,821** |
| **முதன்மைக்கணக்கு மிகை(+)/பற்றாக்குறை(-)** | **-93,425** | **-79,816** | **-93,481** | **-98,865** |
| **முழுமொத்த வரவு செலவு திட்ட மிகை (+)/ பற்றாக்குறை (-)** | **-446,017** | **-433,744** | **-450,180** | **-468,865** |
| **மொத்த நிதியிடல்** | 446,017 | 433,744 | 450,180 | 468,865 |
| வெளிநாட்டு நிதியிடல் (அ) | 243,788 | 143,750 | 218,956 | 197,264 |
| உள்நாட்டு நிதியிடல் | 202,229 | 289,994 | 231,224 | 271,602 |
| சந்தைக் கடன்பாடுகள் | 191,999 | 289,994 | 236,022 | 271,602 |
| வங்கியல்லா | 193,891 | 247,994 | 44,171 | 207,602 |
| வங்கி | -1,892 | 42,000 | 191,850 | 64,000 |
| நாணய மேலாண்மை | -32,112 | வி.கி. | 185,848 | வி.கி. |
| வர்த்தக வங்கிகள் | 30,220 | வி.கி. | 6,002 | வி.கி. |
| சந்தையல்லாக் கடன்பாடுகள் | 10,230 | - | -4,798 | - |
| | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக | | | |
| **மொத்த அரசிறை மற்றும் கொடைகள்** | **14.9** | **15.6** | **14.5** | **15.0** |
| மொத்த அரசிறை | 14.6 | 15.2 | 14.3 | 14.7 |
| வரி அரசிறை | 12.9 | 13.6 | 12.4 | 13.3 |
| வரியில்லா அரசிறை | 1.7 | 1.6 | 1.9 | 1.4 |
| கொடைகள் | 0.3 | 0.4 | 0.2 | 0.3 |
| **செலவினமும் மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும்** | **22.9** | **22.4** | **21.4** | **21.2** |
| நடைமுறை | 16.7 | 16.1 | 15.4 | 14.8 |
| மூலதனமும் தேசிய கடன் வழங்கலும் | 6.1 | 6.4 | 6.0 | 6.5 |
| இதில் அரச முதலீடு | 6.4 | 6.5 | 6.2 | 6.6 |
| **நடைமுறைக்கணக்கு மிகை (+)/ பற்றாக்குறை (-)** | **-2.1** | **-0.8** | **-1.1** | **...** |
| **முதன்மைக்கணக்கு மிகை (+)/ பற்றாக்குறை (-)** | **-1.7** | **-1.3** | **-1.4** | **-1.3** |
| **முழுமொத்த வரவு செலவு திட்ட மிகை (+)/ பற்றாக்குறை (-)** | **-8.0** | **-6.8** | **-6.9** | **-6.2** |
| **மொத்த நிதியிடல்** | **8.0** | **6.8** | **6.9** | **6.2** |
| வெளிநாட்டு நிதியிடல் (அ) | 4.4 | 2.3 | 3.4 | 2.6 |
| உள்நாட்டு நிதியிடல் | 3.6 | 4.6 | 3.5 | 3.6 |
| சந்தை கடன்பாடுகள் | 3.4 | 4.6 | 3.6 | 3.6 |
| வங்கியல்லா | 3.5 | 3.9 | 0.7 | 2.8 |
| வங்கி | ... | 0.7 | 2.9 | 0.9 |
| நாணய மேலாண்மை | -0.6 | வி.கி. | 2.8 | வி.கி. |
| வர்த்தக வங்கிகள் | 0.5 | வி.கி. | 0.1 | வி.கி. |
| சந்தையல்லாக் கடன்பாடுகள் | 0.2 | - | -0.1 | - |

(அ) வெளிநாட்டு முதலீட்டாளருக்கு வழங்கப்பட்ட ரூபாவில் குறித் துரைக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களையும் முறிகளையும் உள்ளடக்குகின்றது

மூலம் : நிதி, திட்டமிடல் அமைச்சு

சொந்தமான தொழில்முயற்சிகள் உபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் தொடர்ந்தும் தொழிற்படுவதுடன் அவற்றின் அளவு, இடர்நேர்வு மற்றும் தொழில்நுட்ப ரீதியான சிக்கல் என்பனவற்றின் காரணமாக தனியார் துறை தொழிற்பட விரும்பாத துறைகளிலேயே தொழிற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிதியியல் ஆற்றலை மேம்படுத்துவதற்காக, இந்நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுவதற்கென செலவுக்கேற்ற விலையிடல் கொள்கையொன்று விதந்துரைக்கப்பட்டு வருகின்றது. மேலும், இந்நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளின் மீது சவால் நிறைந்த நிலைமைகளைக் கட்டுப்படுத்தும் விதத்தில் புதுப்புது தீர்வுகளை விருத்தி செய்ய வேண்டுமென்ற பாரிய பொறுப்புக்கள் சுமத்தப்படும். அரச மூலவளங்கள் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு, செயலாற்றம் குறைந்த அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் செயலாற்றத்தினை உயர்த்துவதற்காக அதன் மேற்பார்வையின் கீழ் 23 அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் மீளமைத்தலினூடாக அரச சொத்துக்களை நிலைப்படுத்தல் மற்றும் உபாய ரீதியான அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் பணிப்பாளர் சபைக்கு தனியார் துறை தொழில்முயற்சியாளர்களையும் தொழில்சார் நிபுணர்களையும் நியமித்தல் என்பனவற்றில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. இச்செயன்முறையின் ஒரு பகுதியாக, பீசிசி லங்கா லிமிடெட், கந்தாளாய் மற்றும் இங்குரான சீனி, மட்பாண்டக் கூட்டுத்தாபனம், லங்கா வப்பிறிக்ஸ், சலுசல மற்றும் லங்கா இறப்பர் தயாரிப்பு மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் ஆகிய பல தொழில்முயற்சிகள் மீளமைப்புச் செயன்முறைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. மேலும், "வரையறுக்கப்பட்ட அரச மூலவளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனம்" என்ற உடமைக் கம்பனியொன்று ஏற்படுத்தப்பட்டது. இதன் குறிக்கோள் யாதெனில் அதன் அதிகார வரம்பின் கீழ் தொழில்முயற்சியிகளை அபிவிருத்தி செய்து கொழும்பு பங்குச் சந்தையின் பகிரங்க பட்டியலிடலுக்காக அவற்றைப் பொருத்தமுடையதாக்குவதேயாகும். இதுவரை பயன்படுத்தப்படாதிருந்த நிலம் மற்றும் கட்டடங்கள், பொறி மற்றும் பொறித்தொகுதி என்பன உட்பட அரசிற்குச் சொந்தமான சொத்துக்களை காத்திரமான முறையில் பயன்படுத்தப்படுவதனை முன்னேற்றுவது அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிதியியல் செயலாற்றத்தினை மேம்படுத்துவதற்காக பின்பற்றப்பட்டு வரும் இன்னொரு முக்கிய உபாயமாகும்.

**அரச படுகடன் முகாமைத்துவ உபாயம், அரசிற்கான நிதியத்தினை சாத்தியமானளவிற்கு குறைந்த செலவில் திரட்டுகின்ற வேளையில் இடர்நேர்வுகளைக் குறைப்பதன் மீது கவனத்தினைச் செலுத்தியது.** ஒரே நேரத்தில் பெருமளவு முதிர்ச்சிகள் இடம்பெறுவதனால் ஏற்படுகின்ற உயர்ந்த மீள்நிதியிடல் இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்காக குறுகிய கால முதிர்ச்சிகளைக் கொண்ட அரச பிணையங்கள் நீண்ட கால முதிர்ச்சிகளைக் கொண்ட அரச பிணையங்கள் மூலம் பதிலீடு செய்யப்பட்டன. சாதகமான பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளைப் பரிசீலனையில் கொண்ட கொடுகடன் தரமிடல் முகவர்கள் 2011இல் நாட்டிற்கான தரமிடலைத் திருத்தினர். பிட்ஜ் ரேரிங் இலங்கையின் வெளிநாட்டு நாணயத் தரமிடலை பீபீ- இற்கு உயர்த்தியதுடன் தோற்றப்பாட்டினையும் 'உறுதியான' நிலையிலிருந்து 'சாதகமான' நிலைக்கு உயர்த்தியது, மூடிஸ் இன்வெஸ்டர் சேர்விஸ் இலங்கையின் பீ1 தரமிடல் தோற்றப்பாட்டினை 'உறுதியான' நிலையிலிருந்து 'சாதகமான' நிலைக்கு தரமுயர்த்திய வேளையில் ஸ்டான்டட் அன்ட் புவர் இலங்கையின் பீ+ தரமிடலின் தோற்றப்பாட்டை 'சாதகமான' என உயர்த்தியது. மேம்பட்ட முதலீட்டாளர் நம்பிக்கை மற்றும் பன்னாட்டுச் சந்தைகளில் நிலவிய தாழ்ந்த வட்டி வீதங்கள் என்பனவற்றின் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் விதத்தில் 2011 யூலையில் அரசாங்கம் ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட நாட்டிற்கான நான்காவது பன்னாட்டு முறிகளை வழங்கியது. இவ்வழங்கலானது 10 ஆண்டிற்கு மேற்பட்ட ஐ.அமெரிக்க திறைசேரிக்கான 332 அடிப்படைப் புள்ளி வீச்சிற்கு சமமான 6.25 சதவீதமான நிலையான விளைவு வீதத்துடன் 10 ஆண்டு முதிர்ச்சிகளைக் கொண்டிருந்தது. இந்நிதியமானது உயர்ந்த செலவினைக் கொண்ட சில படுகடன்களை இளைப்பாறச் செய்யும் விதத்தில் அரசின் வெளிநின்ற படுகடனை மீளமைப்பதற்கு பயன்படுத்தப்பட்டதுடன் உள்நாட்டு மூலவளங்கள் மற்றும் வட்டி வீதங்கள் மீதான அழுத்தத்தினைக் குறைக்கவும் உதவின. மூலவளங்களின் கிடைப்பனைவினை உயர்த்துவதன் மூலம் பொருளாதாரத்தின் வளர்ச்சி உத்வேகத்திற்கு ஆதரவளிக்கும் பொருட்டும் வட்டி வீத அழுத்தங்களை இலகுபடுத்துவதற்காகவும் திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளில் வெளிநாட்டு முதலீடுகளின் வரையறை ஒவ்வொரு முதலீட்டினதும் வெளிநின்ற தொகையின் 10 சதவீதத்திலிருந்து 12.5 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது.


## 6.3 அரசாங்க வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகள்

### அரசிறையும் கொடைகளும்

#### அரசிறை

**பல்வேறு வரிகள் ஒழிக்கப்பட்டமை, வரி வீதங்கள் குறைக்கப்பட்டமை மற்றும் வரி விலக்கல்கள் விரிவுபடுத்தப்பட்டமை என்பனவற்றின் விளைவாக மொ.உ.உற்பத்திக்கான அரசிறை விகிதம் 2010இன் 14.6 சதவீதத்திலிருந்து 2011இல் 14.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** எனினும், பெயரளவு நியதிகளில் மொத்த அரசிறை 2010இன் ரூ.817.3 பில்லியனிலிருந்து 2011இல் ரூ.934.8 பில்லியனுக்கு 14.4 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கு உயர்ந்த பொருளாதார வளர்ச்சியும் இறக்குமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க உயர்வுமே காரணங்களாகும்.

**வரைபடம் 6.1** அரசின் அரசிறை உள்ளடக்கம் - 2011




**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வரி அரசிறை 2010இன் 12.9 சதவீதத்திலிருந்து 2011இல் 12.4 சதவீதத்திற்கு பெயரளவு நியதிகளில் வீழ்ச்சியடைந்த போதும், இது, வருமானத்தினை அடிப்படையாகக் கொண்ட வரிகள், கலால் தீர்வைகள் மற்றும் இறக்குமதி தொடர்பான வரிகளிலிருந்து கிடைத்த உயர்ந்த அரசிறையின் காரணமாக பெயரளவு நியதிகளில் ரூ.812.6 பில்லியனுக்கு 12.1 சதவீதத்தினால் அதிகரித்தது.** வரி முறைமையினை இலகுபடுத்துவதற்காகவும் அரசிறைத் திரட்டலை மேம்படுத்துவதற்காகவும் 2011 இற்கான வரவு செலவுத்திட்டத்தில் பல முக்கிய வரிச் சீர்த்திருத்தங்களும் வரி ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளும் அறிமுகப்படுத்தப்படட போதும், இம்வழிமுறைகளின் முழுமையான தாக்கம் நடுத்தர காலப்பகுதியில் மாத்திரமே உணரப்படக் கூடியதாக இருக்கும். 2011இல் நுகர்வினை அடிப்படையாகக் கொண்ட வரிகள் வரி அரசிறையின் முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் விளங்கி மொத்த வரிச் சேகரிப்பில் 80.6 சதவீதத்திற்கு வகைகூறின. எனினும் மொத்த வரிகளில் வருமான வரியின் பங்கு 2010இன் 18.7 சதவீதத்திலிருந்து 2011இல் 19.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. உயர்ந்த கம்பனி வரி வருமானத்திற்கு மேம்பட்ட கம்பனி வருவாய்கள் உயர்ந்த பொருளாதார பணிக் கட்டணம் என்பன வருமானத்தினை அடிப்படையாகக் கொண்ட வரிச் சேகரிப்புக்களின் முன்னேற்றுவதற்கு பங்களித்தமையே காரணமாகும். 2011இல் வரியல்லா அரசிறை முன்னைய ஆண்டினைவிட ரூ.122.2 பில்லியனிலிருந்து 32 சதவீதத்தினால் உயர்ந்து குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியைப் பதிவு செய்தது. மத்திய வங்கி உட்பட அரச நிறுவனங்களிலிருந்தான இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களின் உயர்ந்தளவு மாற்றல்கள் மற்றும் கட்டணங்கள் மற்றும் விதிப்புக்களிலிருந்தான, குறிப்பாக உயர்ந்த உந்து ஊர்திகளின் பதிவுகள் காரணமாகக் கிடைந்த உயர்ந்த அரசிறை என்பன வரியல்லா அரசிறையின் அதிகரிப்பதற்குப் பங்களித்தன.

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வருமான வரியிலிருந்தான அரசிறை 2011இல் 2.4 சதவீதமாகக் காணப்பட்ட போதும் பெயரளவு நியதிகளில் இது 2010இன் ரூ135.6 பில்லியனிலிருந்து ரூ.157.3 பில்லியனுக்கு 16 சதவீதத்தினால் அதிகரித்தது.** வருமான வரியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டமைக்கு சாதகமான பொருளாதார நிலைமைகளின் உதவியுடன் 2011இல் ஏற்பட்ட உயர்ந்த வருவாய்களே காரணமாகும். 2011இல் கம்பனி வரிகள் ரூ.77.4 பில்லியனுக்கு 35.4 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு வங்கித்தொழில் மற்றும் நிதியியல் பணிகள், உணவு, குடிபானம் மற்றும் புகையிலை; வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் கட்டடவாக்கக் கைத்தொழில் என்பனவற்றின் செயலாற்றத்தில் ஏற்பட்ட முன்னேற்றமே காரணமாக அமைந்தது. உழைக்கும் போதே செலுத்தும் வரி அரசிறை ஊழியர்களுக்கும் விரிவாக்கப்பட்ட போதும், கம்பனி அல்லா வரிகள் (உழைக்கும் பொழுதே செலுத்தும் வரி உட்பட) 2010இன் ரூ.21.7 பில்லியனிலிருந்து 2011இல் ரூ.20.4 பில்லியனுக்கு 6.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு வரியற்ற கீழ்மட்டம் ரூ.300,000 இலிருந்து ரூ.500,000 இற்கு உயர்த்தப்பட்டமையும் வருமான மூலமாக தொழில்நிலையிலிருந்து கிடைக்கும் வருமானத்தை மட்டும் கொண்டுள்ள தனிப்பட்டவர்களுக்காக ரூ.100,000 கொண்ட மேலதிக வரியற்ற படியொன்று வழங்கப்பட்டமையும் காரணங்களாக அமைந்தன. இவ்வாண்டுப் பகுதியில் பொருளாதார பணிக் கட்டணத்திலிருந்தான அரசிறை ரூ.21.3 பில்லியனுக்கு 18.2 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு இது சில துறைகளுக்கு வழங்கப்பட்ட விலக்கல்களின் எதிர்மறையான தாக்கத்தையும் வரியற்ற கீழ்மட்டத்தினை காலாண்டொன்றிற்கு ரூ.7.5 மில்லியனிலிருந்து ரூ.25 மில்லியனுக்கு அதிகரித்தமையினையும் மிகக் கூடுதலாக எதிரீடு செய்த உயர்ந்த வியாபாரப் புரள்வுகளே காரணமாகும்.

**அட்டவணை 6.2** அரசிறையின் பொருளாதாரப் பகுப்பாய்வு

| விபரம் | 2010 | 2011 ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 2011 தற்காலிக மானவை | 2012 ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|
| ரூ. மில்லியன் | | | | |
| வரி அரசிறை | 724,747 | 861,943 | 812,611 | 1,000,559 |
| வருமான வரிகள் | 135,623 | 154,883 | 157,309 | 190,270 |
| பெ.கூ.வ | 219,990 | 238,390 | 215,576 | 264,917 |
| கலால் தீர்வை | 129,864 | 152,250 | 186,010 | 223,125 |
| இறக்குமதித் தீர்வை | 64,163 | 92,803 | 75,974 | 93,830 |
| ஏனைய வரிகள் | 175,107 | 223,617 | 177,742 | 228,417 |
| வரியல்லா அரசிறை | 92,532 | 101,377 | 122,166 | 105,522 |
| மொத்த அரசிறை | 817,279 | 963,320 | 934,776 | 1,106,081 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீமாக | | | | |
| வரி அரசிறை | 12.9 | 13.6 | 12.4 | 13.3 |
| வருமான வரிகள் | 2.4 | 2.4 | 2.4 | 2.5 |
| பெ.கூ.வ | 3.9 | 3.8 | 3.3 | 3.5 |
| கலால் தீர்வை | 2.3 | 2.4 | 2.8 | 3.0 |
| இறக்குமதித் தீர்வை | 1.1 | 1.5 | 1.2 | 1.3 |
| ஏனைய வரிகள் | 3.1 | 3.5 | 2.7 | 3.0 |
| வரியல்லா அரசிறை | 1.7 | 1.6 | 1.9 | 1.4 |
| மொத்த அரசிறை | 14.6 | 15.2 | 14.3 | 14.7 |

மூலம் : நிதி, திட்டமிடல் அமைச்சு

எனினும், பிடித்துவைத்தல் வரிகளிலிருந்தான அரசிறை ரூ.38.2 பில்லியனுக்கு 1.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு இவ்வாண்டில் நிலவிய தாழ்ந்த வட்டி வீதங்களும் குறிப்பிட்ட கட்டணங்களின் மீதான பிடித்துவைத்தல் வரி அகற்றப்பட்டமையும் அதேபோன்று பிடித்துவைத்தல் வரியின் வீதம் குறைக்கப்பட்டமையும் காரணமாக விளங்கி 2011இல் பிடித்துவைத்தல் வரிச் சேகரிப்பில் காணப்பட்ட ஒட்டுமொத்த குறைப்பிற்கு பங்களித்தன.

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறை 2010இன் 3.9 சதவீதத்திலிருந்து 2011இல் 3.3 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தமைக்கு பெறுமதிசேர் வரி வீதங்கள் குறைந்த வீதமான 12 சதவீதத்தில் ஒருமுகப்படுத்தப்பட்டமையே முக்கிய காரணமாகவிருந்தது.** பெயரளவு நியதிகளில், பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறை 2011இல் ரூ.215.6 பில்லியனுக்கு 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக, மொத்த வரி அரசிறைக்கான பெறுமதிசேர் வரியின் பங்களிப்பு 2010இன் 30.4 சதவீதத்திலிருந்து 2011இல் 26.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வீட்டுப்பொருட்கள் மற்றும் பணிகளின் மீதான பெறுமதிசேர் வரி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 14.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. நிதியியல் பணிகள் மீதான பெறுமதிசேர் வரியில் செய்யப்பட்ட குறைப்பின் தாக்கம் இவ்வாண்டில் ஏறத்தாழ ரூ.10.1 பில்லியன் கொண்ட அரசிறை இழப்புக்களைத் தோற்றுவித்தது. உள்ளீட்டு பெறுமதிசேர் வரிக் கழிவுகளின் குறைப்புக்கள் மீதான கட்டுப்பாடுகள் 85 சதவீதத்திலிருந்து 100 சதவீதத்திற்கு மேலும் தளர்த்தப்பட்டமை, தொலைத் தொடர்பூட்டல் பணிகள், கல்விப் பணிகள், மற்றும் வெளிநாட்டு நிதிகளின் மூலம் நிதியிடப்பட்ட உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களுக்கு வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் என்பனவற்றிற்கு வழங்கப்பட்ட விலக்கல்கள் வீட்டுப்பொருட்கள் மற்றும் பணிகளிலிருந்தான பெறுமதிசேர் வரிச் சேகரிப்புக்கள் குறைவடையக் காரணமாயின. 2011இன் மொத்த இறக்குமதிகளில் 50.7 சதவீதமான வளர்ச்சி காணப்பட்ட போதும் இவ்வாண்டுப் பகுதியில் இறக்குமதிகள் மீதான பெறுமதிசேர் வரி பெயரளவு நியதிகளில் 12.8 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்தது. தாழ்ந்த பெறுமதிசேர் வரி வீதம், பெற்றோலுக்கு வழங்கப்பட்ட விலக்கல்கள் அதேபோன்று முன்னர் பெறுமதிசேர் வரிக்கு உட்படுத்தப்பட்ட பல உணவுப் பொருட்களின் மீது அறிமுகப்படுத்தப்பட்ட சிறப்புப் பண்டத்தீர்வை என்பன 2011இல் இறக்குமதிகள் மீதான பெறுமதிசேர் வரிச் சேகரிப்பினைக் குறைத்தன.

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக கலால் தீர்வைகளிலிருந்தான அரசிறை 2010இன் 2.3 சதவீதத்திலிருந்து 2011இல் 2.8 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு உந்து ஊர்திகளின் இறக்குமதியிலிருந்து சேகரிக்கப்பட்ட கலால் தீர்வையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பே காரணமாகும்.** கலால் தீர்வையிலிருந்தான அரசிறை 2010இன் ரூ.129.9 பில்லியனிலிருந்து 2011இல் ரூ.186 பில்லியனுக்கு 43.2 சதவீதத்தால் அதிகரித்து வரவு செலவுத்திட்ட இலக்கான ரூ.33.8 பில்லியனையும் விஞ்சியது. இதன் விளைவாக மொத்த வரி அரசிறையில் கலால் வரிகளின் பங்கு 2010இன் 17.9 சதவீதத்திலிருந்து 2011இல் 22.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. உந்து ஊர்திகளின் இறக்குமதி மீதான கலால் வரிகள் முன்னைய ஆண்டினைவிட 2011இல் ரூ.52.8 பில்லியனுக்கு 149.2 சதவீதத்தினால் அதிகரித்து, 2011இன் உந்து உர்திகளின் இறக்குமதியில் 93.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பிரதிபலித்தது. இவ்வாண்டுப் பகுதியில் குடிவகை மீதான கலால் வரிகள் ரூ.55.3 பில்லியனுக்கு 50.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு 2010 நவெம்பரிலிருந்து 2011 ஒத்தோபர் வரையான காலப்பகுதியில் மூன்று தடவைகளில் கலால் தீர்வைகள் அதிகரிக்கப்பட்டமை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிய சந்தைகள் திறக்கப்பட்டமையினைத் தொடர்ந்தும் உயர்ந்தளவு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தமையினைத் தொடர்ந்தும் அதிகரித்த கேள்வியின் காரணமாக வெறியம் தேறல் குடிவகையின் உற்பத்தி முறையே 9.1 சதவீதத்தினாலும் 22.5 சதவீதத்தினாலும் உயர்வடைந்தமை என்பன காரணங்களாக விளங்கின. 2010 நவெம்பரிலிருந்து 2011 ஒத்தோபர் வரையான காலப்பகுதியில் கலால் தீர்வைகள் தொடர்ந்து மூன்று தடவைகள் மேல் நோக்கி திருத்தப்பட்டமை மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிய சந்தைகள் திறக்கப்பட்டமை என்பனவற்றின் விளைவாக சிகரட் மற்றும் புகையிலை மீதான கலால் வரிகள் 2011இல் ரூ.49.6 பில்லியனுக்கு 22 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும், பெற்றோலிய உற்பத்திகள் மீதான கலால் தீர்வைகளிலிருந்தான அரசிறை ரூ.22.5 பில்லியனுக்கு 19.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

**மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தான அரசிறை, 2010இன் 0.8 சதவீதத்திலிருந்து 2011இல் 0.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு, 2011இல் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக்குச் செய்யப்பட்ட பல்வேறு முக்கிய மாற்றங்களே காரணமாகும்.** பெயரளவு நியதிகளில், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சேகரிப்பு ரூ.35.7 பில்லியனுக்கு 22.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. வீட்டுப் பொருட்கள் மற்றும் பணிகளின் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ரூ.19.0 பில்லியனுக்கு 1.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி வீதம் 3 சதவீதத்திலிருந்து 2 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டமையும் இதுவரை மாகாண சபையினால் சேகரிக்கப்பட்ட மொத்தப் புரள்வு வரி ஒழிக்கப்பட்டமைக்கு ஈடுசெய்யும் விதத்தில் தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரிச் சேகரிப்பில் மூன்றிலொரு பங்கு மாகாண சபைகளுக்கு மாற்றல் செய்யப்பட்டமையும் முக்கிய காரணங்களாக அமைந்தன. இறக்குமதிகளில் உயர்ந்த வளர்ச்சி காணப்பட்ட

போதும் இறக்குமதிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி 2011இல் ரூ.16.6 பில்லியனுக்கு 37.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு தாழ்ந்த தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி வீதமும் குறிப்பிட்ட செயற்றிட்டங்களுக்காக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் வேறுபட்ட மூலப்பொருட்களுக்கு விலக்கல்கள் விரிவாக்கப்பட்டமையும் காரணங்களாக விளங்கின. தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகர்களுக்கு விரிவாக்கப்பட்ட போதும் தள விரிவாக்கத்திலிருந்தான எதிர்பார்க்கப்பட்ட அரசிறை குறிப்பிடத்தக்களவிற்கு இருக்காமையும் புதிய வரி இறுப்பாளர்களை பதிவு செய்தலில் காணப்பட்ட தாமதமுமே காரணமாகும். 2011 இறுதியில் வரி செலுத்தத்தக்க மொத்த மற்றும் சில்லறை வர்த்தகர்களில் 50 சதவீதத்தினர் மட்டுமே தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரிக்காக பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக இறக்குமதித் தீர்வைகள் மற்றும் சிறப்புப் பண்டத் தீர்வைகள் 2010இன் 1.3 சதவீதத்திலிருந்து 2011இல் 1.4 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு இறக்குமதிகளில், குறிப்பாக உந்து ஊர்திகள் மற்றும் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.** பெயரளவு நியதிகளில் இறக்குமதித் தீர்வைகளிலிருந்தான அரசிறை, 2010இன் ரூ.64.2 பில்லியனிலிருந்து 2011இல் ரூ.76 பில்லியனுக்கு 18.4 சதவீதத்தினால் அதிகரித்து, மொத்த வரி அரசிறையில் இறக்குமதித் தீர்வைகளின் பங்கினை 2010இன் 8.9 சதவீதத்திலிருந்து 2011இல் 9.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும், இறக்குமதி வரிகளில் ஏற்பட்ட வளர்ச்சி 2011இல் திரண்ட இறக்குமதிகளில் ஏற்பட்ட 50.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியிலும் பார்க்க குறிப்பிடத்தக்களவிற்கு குறைவானதாகும். 2010இன் 27.2 சதவீதத்திலிருந்து 2011இல் மொத்த இறக்குமதிகளில் 41.9 சதவீதத்திற்கு அதிகரித்த உயர்ந்த தீர்வையற்ற இறக்குமதிகள், பால்மா, யூரியா மற்றும் வளமாக்கி என்பனவற்றிற்கு வழங்கப்பட்ட சுங்கத் தீர்வைத் தளர்த்தல்கள் விலக்கல்கள் வெளிநாட்டு நிதிகளைக் கொண்ட செயற்றிட்டங்கள் தொலைத் தொடர்பூட்டல், தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பம், வெளிமூலங்களுக்கு பணிகளை வழங்கும் வியாபாரத் துறைகள் என்பனவற்றிற்கும் விரிவாக்கப்பட்டமை அதேபோன்று உந்து ஊர்திகள், மின்னியல் மற்றும் இலத்திரனியல் உற்பத்திகள் மீதான இறக்குமதித் தீர்வைக் குறைப்பு என்பன இறக்குமதித் தீர்வைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட அரசிறையை குறிப்பிடத்தக்களவிற்கு குறைத்துவிட்டன. இதன் விளைவாக, சிறப்புப் பண்டத் தீர்வை உள்ளிட்ட சராசரி சுங்கத் தீர்வை வீதம் 2010இன் 4.9 சதவீதத்திலிருந்து 2011இல் 4.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், உந்து ஊர்திகளின் இறக்குமதியிலிருந்து சேகரிக்கப்பட்ட தீர்வை 2010இன் ரூ.18.2 பில்லியனிலிருந்து 2011இல் ரூ.28.5 பில்லியனுக்கு 56.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து 2011இன் இறக்குமதித் தீர்வைகளில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு பங்களித்தது. பெயரளவு நிதிகளில், சிறப்புப் பண்டத் தீர்வைகளிலிருந்தான அரசிறை 2011இல் ரூ.15.6 பில்லியனுக்கு 53.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து, மொத்த வரி அரசிறையில் சிறப்புப் பண்டத் தீர்வையின் பங்கினை 2010இன் 1.4 சதவீதத்திலிருந்து 2011இல் 1.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், சீனி, தகரத்திலடைக்கப்பட்ட மீன் மற்றும் பருப்பு ஆகிய ஐந்து பண்டங்களின் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை, 2011இன் மொத்த சிறப்புப் பண்டத் தீர்வையின் சேகரிப்பில் 68.4 சதவீதத்திற்கு (ரூ.10.7 பில்லியன்) வகைகூறி இவ்வாண்டில் சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்தான உயர்ந்த சேகரிப்பிற்கு பெருமளவிற்குப் பங்களித்தது.

**மற்றைய அரசிறைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட அரசிறையின் செயலாற்றம் கலப்பானதாகக் காணப்பட்டது.** துறைமுகங்கள் மற்றும் வானூர்தி அபிவிருத்தி தீர்வையிலிருந்தான அரசிறை 2010இல் மொ.உ.உற்பத்தியின் 0.9 சதவீதத்திலிருந்து 2011இன் மொ.உ.உற்பத்தியில் 1 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும் பெயரளவு நியதிகளில் துறைமுக வானூர்தி நிலைய அபிவிருத்தித் தீர்வை 2010இல் ரூ.49.6 பில்லியனிலிருந்து 2011இல் ரூ.66 பில்லியனுக்கு 33 சதவீதத்தினால் அதிகரித்து, மொத்த வரி அரசிறையில் துறைமுகங்கள் வானூர்தி நிலைய அபிவிருத்தித் தீர்வையின் பங்கினை 2010இன் 6.8 சதவீதத்திலிருந்து 2011இல் 8.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஒரு சில விலக்கல்களுடன் கூடிய பரந்த வரித்தளம் 2011இல் துறைமுக வானூர்தி நிலைய அபிவிருத்தித் தீர்வைச் சேகரிப்பு, மற்றைய இறக்குமதிகளுடன் தொடர்பான வரிகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பதற்குப் பங்களித்தது. பெயரளவு நியதிகளில் செஸ் சேகரிப்பு ரூ.29.7 பில்லியனுக்கு 0.3 சதவீதத்தினால் சிறிதளவிற்கு வீழ்ச்சியடைந்துள்ள போதும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக இது 2011இல் 0.5 சதவீதத்தில் நிலைபெற்றிருந்தது. உள்ளூர் கைத்தொழில்களுக்கு ஆதரவளிப்பதற்காக பெரும்பாலான மூலப்பொருட்கள் மற்றும் பொறிகள் மீது பிரயோகிக்கத்தக்க செஸ் நீக்கப்பட்டமையானது 2011இல் குறைந்தளவு செஸ் சேகரிக்கப்பட்டமைக்கு பெருமளவு காரணமாயிற்று. செலூலர் செல்லிட தொலைபேசி வாடிக்கையாளர் தீர்வைக்குப் பதிலாக அமைந்த 20 சதவீத தொலைத் தொடர்பூட்டல் தீர்வை பெறுமதிசேர் வரி தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, இதுவரை தொலைத் தொடர்பூட்டல் துறைக்கு பிரயோகிக்கப்பட்ட சுற்றாடல் தீர்வை 2011இல் ரூ.18.6 பில்லியனைத் திரட்டியது. உரிமக் கட்டணங்களிலிருந்தான அரசிறையும் ஏனைய வரிகளும் பெயரளவு நியதிகளில் 2010இன் ரூ.15.4 பில்லியன்களிலிருந்து ரூ.8 பில்லியன்களுக்கு 47.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பிரதேச உட்கட்டமைப்பு அபிவிருத்தி தீர்வை, சமூக பொறுப்பாண்மை தீர்வை மற்றும் சுற்றாடல் பாதுகாப்புத் தீர்வை என்பன அகற்றப்பட்டமையே முக்கிய காரணமாகும்.

**2011இல் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வரியல்லா அரசிறை 2010இன் 1.7 சதவீதத்திலிருந்து 1.9 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு பெயரளவு நியதிகளில் வரியல்லா மூலங்களிலிருந்தான அரசிறை 2010இன் ரூ.92.5 பில்லியனிலிருந்து 2011இல் ரூ.122.2 பில்லியனுக்கு 32 சதவீதத்தினால் அதிகரித்தமையே காரணமாகும்.** இதன் விளைவாக, மொத்த அரசிறையில் வரியல்லா அரசிறையின் பங்கு 2010இன் 11.3 சதவீதத்திலிருந்து 2011இல் 13.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களின் மாற்றல்களில் ஏற்பட்ட அதிகரிப்புக் கட்டணம் மற்றும் விதிப்புக்களிலிருந்தான உயர்ந்த அரசிறையும் வரியல்லா அரசிறையின் பெயரளவு அதிகரிப்பிற்கு முக்கியமாகப் பங்களித்தன. மத்திய வங்கியிலிருந்தான இலாப மாற்றல்கள் 2011இல் ரூ.22 பில்லியனுக்கு 46.7 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் மற்றைய அரச நிறுவனங்களிலிருந்தான இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களினது மாற்றல்கள் ரூ.34.4 பில்லியனுக்கு 9.7 சதவீதத்தினால் அதிகரித்தன. கட்டணங்களும் விதிப்புக்களும் ரூ.37.3 பில்லியனுக்கு 62.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு உந்து ஊர்திகளின் பதிவுக் கட்டண வருமானங்களிலும் ஏனைய விதிப்புகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். 2011இல் வட்டி மற்றும் வாடகையிலிருந்தான வருமானமும் ரூ.13.4 பில்லியனுக்கு 33.4 சதவீதத்தினால் அதிகரித்தது.

## கொடைகள்

**வெளிநாட்டுக் கொடைகளின் பெறுகைகள் 2010இன் ரூ.16.9 பில்லியனிலிருந்து 2011இல் ரூ.15.1 பில்லியனுக்கு 10.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.** பல்புடைக் கொடையாளர்களிடமிருந்து வெளிநாட்டுக் கொடைகள் 2010இன் ரூ.11.3 பில்லியனிலிருந்து 2011இல் ரூ.12.1 பில்லியனுக்கு 6.9 சதவீதத்தினால் அதிகரித்து பல்புடை மூலங்களிலிருந்தான கொடைகளின் பங்கை மொத்தக் கொடையில் 2010இன் 66.9 சதவீதத்திலிருந்து 2011இல் 80 சதவீதத்திற்கு அதிகரித்தது. மறுபுறத்தில் இருபுடைக் கொடையாளர்களிடமிருந்தான கொடைகள் 2010இன் ரூ.5.6 பில்லியனிலிருந்து 2011இல் ரூ.3 பில்லியனுக்கு 46.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து இலங்கை மத்திய தர வருமான நாடென்ற அந்தஸ்திற்குப் படிப்படியாக நகர்வதனை பிரதிபலித்தது.

## செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல்

**மொத்தச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் 2010இன் மொ.உ.உற்பத்தியின் 22.9 சதவீதத்திலிருந்து 2011இல் மொ.உ.உற்பத்தியின் 21.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு மீண்டெழும் செலவினத்தினைச் சிக்கனப்படுத்துவதற்கு அரசினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக இருந்தவேளையில் மூலதனச் செலவினம் உபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு முன்னுரிமைப்படுத்தப்பட்டன.** மொத்தச் செலவினத்திலும் தேறிய கடன் வழங்கலிலும் ஏற்பட்ட 1.5 சதவீதப் புள்ளிகளின் குறைப்பு மீண்டெழும் செலவினம் 1.4 சதவீதப் புள்ளியினாலும் மூலதனச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் 0.1 சதவீதப் புள்ளியினாலும் குறைவடைந்தமையின் இணைந்த விளைவாகும். எனினும், பெயரளவு நியதிகளில் மொத்தச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் முன்னைய ஆண்டின் ரூ.1,280.2 பில்லியனிலிருந்து ஒப்பிடுகையில் 2011இல் ரூ.1,400.1 பில்லியனுக்கு 9.4 சதவீதத்தினால் அதிகரித்த போதும் இது இவ்வாண்டிற்காக ஆரம்ப வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கான ரூ.1,419.7 பில்லியனிலும் பார்க்க குறைவானதாகும்.


**அரசாங்கத்தின் இறைத் திரட்சி முயற்சிகளைப் பேணும் விதத்தில் மீண்டெழும் செலவினம் 2010இல் மொ.உ.உற்பத்தியின் 16.7 சதவீதத்திலிருந்து 2011இல் மொ.உ.உற்பத்தியில் 15.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** பெயரளவு நியதிகளில் மீண்டெழும் செலவினம் 2010இன் ரூ.937.1 பில்லியனுடன்

**அட்டவணை 6.3 செலவினத்தினுடைய பொருளாதாரப் பகுப்பாய்வும் மீள்கொடுப்பனவு கழித்த கடன்வழங்கலும்**

| விடயம் | 2010 | 2011 ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 2011 தற்காலிக மானவை | 2012 ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|
| ரூ. மில்லியன் | | | | |
| **நடைமுறைச் செலவினம்** | **937,094** | **1,017,155** | **1,006,633** | **1,107,902** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவு | 388,286 | 455,686 | 433,331 | 501,503 |
| இதில் சம்பளங்கள் மற்றும் கூலிகள் | 300,558 | 344,023 | 319,601 | 367,980 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 352,592 | 353,928 | 356,699 | 370,000 |
| வெளிநாட்டு | 55,464 | 44,528 | 68,565 | 48,000 |
| உள்நாட்டு | 297,127 | 309,400 | 288,134 | 322,000 |
| நடைமுறை மாற்றல்களும் உதவிக் கொடுப்பனவுகளும் | 196,216 | 207,541 | 216,602 | 236,400 |
| இதில் குடும்ப அலகுகளுக்கும் ஏனைய துறைகளுக்கும் | 156,194 | 165,182 | 171,438 | 186,336 |
| சமுர்த்தி | 9,241 | 9,300 | 9,044 | 12,900 |
| ஓய்வூதியங்கள் | 90,995 | 98,000 | 99,936 | 111,353 |
| வளமாக்கி உதவிக் கொடுப்பனவு | 26,028 | 20,000 | 29,802 | 33,800 |
| ஏனையவை | 29,931 | 37,882 | 32,656 | 28,283 |
| **மூலதனச் செலவினம்** | **302,087** | **351,899** | **363,001** | **448,732** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 158,488 | 199,579 | 202,627 | 264,289 |
| மூலதன மாற்றல்கள் | 143,599 | 168,975 | 160,374 | 214,678 |
| குறைச் செலவின ஏற்பாடு | - | -16,654 | - | -30,235 |
| **மீள் கொடுப்பனவு கழித்த கடன் வழங்கல்** | **41,025** | **50,609** | **30,464** | **38,312** |
| மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும் | 1,280,205 | 1,419,663 | 1,400,097 | 1,594,946 |
| மொ.உ.உ. இன் சதவீதமாக | | | | |
| **நடைமுறை செலவினம்** | **16.7** | **16.1** | **15.4** | **14.8** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவு | 6.9 | 7.2 | 6.6 | 6.7 |
| இதில் சம்பளங்களும் கூலிகளும் | 5.4 | 5.4 | 4.9 | 4.9 |
| வட்டிக் கொடுப்பனவுகளும் | 6.3 | 5.6 | 5.5 | 4.9 |
| வெளிநாட்டு | 1.0 | 0.7 | 1.1 | 0.6 |
| உள்நாட்டு | 5.3 | 4.9 | 4.4 | 4.3 |
| நடைமுறை மாற்றல்களும் உதவிக் கொடுப்பனவுகளும் | 3.5 | 3.3 | 3.3 | 3.1 |
| இதில் குடும்ப அலகுகளும் ஏனைய துறைகளும் | 2.8 | 2.6 | 2.6 | 2.5 |
| சமுர்த்தி | 0.2 | 0.1 | 0.1 | 0.2 |
| ஓய்வூதியங்கள் | 1.6 | 1.5 | 1.5 | 1.5 |
| வளமாக்கி உதவிக்கொடுப்பனவு | 0.5 | 0.3 | 0.5 | 0.4 |
| ஏனையவை | 0.5 | 0.6 | 0.5 | 0.4 |
| **மூலதனச் செலவினம்** | **5.4** | **5.6** | **5.5** | **6.0** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 2.8 | 3.1 | 3.1 | 3.5 |
| மூலதன மாற்றல்கள் | 2.6 | 2.7 | 2.5 | 2.9 |
| குறைச் செலவினம் | - | -0.3 | - | -0.4 |
| **மீள் கொடுப்பனவு கழித்த கடன் வழங்கல்** | **0.7** | **0.8** | **0.5** | **0.5** |
| மொத்த செலவினமும் தேறிய கடன்வழங்கலும் | **22.9** | **22.4** | **21.4** | **21.2** |

மூலம் : நிதி, திட்டமிடல் அமைச்சு

**வரைபடம் 6.2** அரச நடைமுறைச் செலவினத்தின் உள்ளடக்கம் - 2011




ஒப்பிடுகையில் 2011இல் 7.4 சதவீதத்தினால் ரூ.1006.6 பில்லியனுக்கு அதிகரித்தது. எனினும், 2011இல் மீண்டெழும் செலவினம் இவ்வாண்டிற்கான ஆரம்ப வரவு செலவுத்திட்ட மதிப்பீடான ரூ.1,017.2 பில்லியனை விட குறைவானதாகும். சம்பளங்கள், கூலிகள் மற்றும் ஓய்வூதியங்களில் அதிகரிப்புக் காணப்பட்ட போதும், வட்டிக் கொடுப்பனவுகளில் காணப்பட்ட மெதுவான வளர்ச்சி 2011இல் மீண்டெழும் செலவினத்தின் பெயரளவு அதிகரிப்பு மிதமடைவதற்கு உதவியது.

**இவ்வாண்டுப் பகுதியில் 2011இல் அரச துறை ஊழியர்களின் சம்பளங்களிலும் கூலிகளிலும் ஏற்பட்ட செலவினம் 6.3 சதவீதத்தினால் ரூ.319.6 பில்லியன் அதிகரித்த போதும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக இது 2010இன் 5.4 சதவீதத்திலிருந்து 2011இல் 4.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** பாதுகாப்பு பொதுமக்கள் ஒழுங்கு மற்றும் குடிமக்கள் பாதுகாப்பு ஆளணியினர் உள்ளிட்ட மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளங்களும் கூலிகளும் 2011இல் ரூ.228.8 பில்லியனுக்கு 4.6 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் மாகாண சபை ஊழியர்களின் சம்பளங்களும் கூலிகளும் ரூ.90.8 பில்லியனுக்கு 10.9 சதவீதத்தினால் அதிகரித்தன. 2011 சனவரியிலிருந்து அனைத்து அரச துறைப் பணியாளர்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்ட அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவீதத்திற்கு சமமானதொரு சிறப்புப் படி, அதிகரிக்கப்பட்ட அரச துறை ஊழியர்களின் வாழ்க்கைச் செலவுப்படி, அதேபோன்று அரச துறை ஊழியர்களில் குறிப்பிட்ட வகையினருக்கு வழங்கப்பட்ட படிகளின் அதிகரிப்பு என்பன 2011இல் சம்பளங்கள் மற்றும் கூலிகளின் பெயரளவு அதிகரிப்பிற்கு பங்களித்தன. இரண்டாவது பாரிய மீண்டெழும் செலவின விடயமாகக் காணப்பட்ட சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் 2011இன் மொத்த மீண்டெழும் செலவினத்தில் 31.7 சதவீதத்திற்கு வகைகூறின.

**2010ஆம் ஆண்டிலிருந்து நிலவி வரும் தாழ்ந்த வட்டி வீத அமைப்பினதும் 2010இல் படுகடன் இருப்பில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சியினதும் சாதகமான சூழலானது உயர்ந்த செலவினைக் கொண்ட உள்நாட்டுப் படுகடனிலிருந்து தாழ்ந்த செலவினைக் கொண்ட வெளிநாட்டுப் படுகடனுக்கு மாறும் விதத்தில் அரசாங்கம் அதன் படுகடன் சொத்துப்பட்டியலை மீளவமைப்பதற்கு எடுத்த முன்னெடுப்புக்களுடன் சேர்ந்து 2011இல் வட்டிக் கொடுப்பனவுகளைக் கட்டுப்படுத்த உதவின.** 2011இல் வட்டி வீத செலவினம் ரூ.356.7 பில்லியனுக்கு 1.2 சதவீதத்தினால் மாத்திரம் அதிகரித்தது. இது 2010இல் பதிவு செய்யப்பட்ட 13.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பிலும் பார்க்க குறிப்பிடத்தக்களவிற்கு குறைவானதாகும். இதனுடன் இசைந்து செல்லும் விதத்தில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வட்டிச் செலவு முன்னைய ஆண்டின் 6.3 சதவீதத்திலிருந்து 2011இல் 5.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், வட்டிக் கொடுப்பனவுகள் தனித்து பாரிய மீண்டெழும் செலவின விடயமாக விளங்கி 2011இல் மொத்த மீண்டெழும் செலவினத்தில் 35.4 சதவீதத்திற்கு வகைகூறியது.

**2011இன் மொத்த வட்டிக் கொடுப்பனவில் 80.7 சதவீதத்திற்கு வகை கூறிய உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவகள் ரூ.288.1 பில்லியனுக்கு 3.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2011இல் ரூ.68.6 பில்லியனுக்கு 23.6 சதவீதத்தினால் அதிகரித்தன.** உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் வீழ்ச்சியடைந்தமைக்கு உள்நாட்டுப் படுகடன் மீதான சராசரி வட்டி வீதம் முன்னைய ஆண்டின் 12.4 சதவீதத்திலிருந்து 2011இல் 11.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். வெளிநின்ற திறைசேரி முறிகளின் இருப்பு 2009இல் 18.1 சதவீதத்தினாலும் 2010இல் 8.6 சதவீதத்தினாலும் அதிகரித்தமைக்கிடையிலும் 2011இல் திறைசேரி முறிகளின் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ.216.5 பில்லியனுக்கு 3.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2010இலும் 2011இலும் வழங்கப்பட்ட தாழ்ந்த நறுக்கு வீதங்கள் ஆய்விற்குரிய காலப்பகுதியில் வட்டிக் கொடுப்பனவுகள் கட்டுப்படுத்தப்பட உதவின. 2011ல் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ.46.3 பில்லியனுக்கு 21.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. 2011இல் திறைசேரி உண்டியல்களின் வெளிநின்ற இருப்பு ரூ.76.4 பில்லியனால் அதிகரித்த போதும் முதிர்ச்சியடைந்த திறைசேரி உண்டியல்களின் மீள்வழங்கல் குறைந்த வழங்கல் வீதத்தில் மேற்கொள்ளப்பட்டமையினால் 2011இல் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் குறைவடைந்தன. ரூபாப் பிணையங்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் முறையே ரூ.11.2 பில்லியனாகவும் ரூ.8.2 பில்லியனாகவும் காணப்பட்டன. அதேவேளை, வெளிநாட்டுப் படுகடன் மீதான சராசரி வட்டி வீதம் முன்னைய ஆண்டின் 3.2 சதவீதத்திலிருந்து 2011இல் 3.4 சதவீதத்திற்கு சிறிதளவினால் அதிகரித்தமைக்கு, 2010இன் மொத்த வெளிநாட்டுப் படுகடன் இருப்பில் திறைசேரி

**அட்டவணை 6.4 செலவினத்தின் தொழிற்பாட்டுப் பகுப்பாய்வு**

| விடயம் | 2010 | 2011 | | 2011 |
|---|---|---|---|---|
| | | ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | தற்காலிக மானவை | ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள |
| ரூ. மில்லியன் | | | | |
| **நடைமுறைச் செலவினம்** | **937,094** | **1,017,155** | **1,006,633** | **1,107,902** |
| அரச பொதுப் பணிகள் | 228,136 | 256,745 | 245,266 | 266,174 |
| பொது நிருவனம் | 37,895 | 42,236 | 43,076 | 49,646 |
| பாதுகாப்பு | 145,243 | 163,486 | 159,553 | 164,785 |
| பொதுமக்கள் ஒழுங்கு, பாதுகாப்பு | 44,998 | 51,024 | 42,637 | 51,743 |
| சமூகப் பணிகள் | 267,636 | 306,506 | 314,137 | 357,383 |
| கல்வி | 85,195 | 99,278 | 99,043 | 107,988 |
| நலம் | 60,506 | 70,788 | 74,443 | 82,153 |
| நலன்புரி | 107,690 | 121,172 | 123,122 | 146,912 |
| சமூகப் பணிகள் | 14,245 | 15,269 | 17,529 | 20,330 |
| பொருளாதாரப் பணிகள் | 85,440 | 97,476 | 88,233 | 99,652 |
| வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம் | 44,081 | 51,678 | 46,290 | 51,471 |
| வலு மற்றும் நீர் வழங்கல் | 3,492 | 4,125 | 3,533 | 3,706 |
| போக்குவரத்து மற்றும் தொடர்பாடல | 31,246 | 33,856 | 31,823 | 32,078 |
| ஏனையவை | 6,621 | 7,817 | 6,587 | 12,398 |
| ஏனையவை | 355,882 | 356,427 | 358,996 | 384,694 |
| இதில் வட்டிக் கொடுப்பனவு | 352,592 | 353,928 | 356,699 | 370,000 |
| **மூலதனச் செலவினம், கடன்வழங்கல்** | **356,519** | **413,546** | **407,489** | **497,465** |
| அரச பொதுப் பணிகள் | 21,510 | 24,897 | 32,484 | 27,851 |
| பொது நிருவாகம் | 20,212 | 23,657 | 28,668 | 26,795 |
| பொதுமக்கள் ஒழுங்கு, பாதுகாப்பு | 1,298 | 1,240 | 3,816 | 1,057 |
| சமூகப் பணிகள் | 56,205 | 69,122 | 62,953 | 92,500 |
| கல்வி | 19,053 | 21,129 | 22,326 | 33,307 |
| நலம் | 13,329 | 16,939 | 14,774 | 27,878 |
| வீடமைப்பு | 5,489 | 9,237 | 6,712 | 10,896 |
| சமூகப் பணிகள் | 18,334 | 21,817 | 19,141 | 20,418 |
| பொருளாதாரப் பணிகள் | 278,803 | 335,721 | 311,594 | 406,764 |
| வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம | 24,865 | 40,521 | 28,568 | 51,187 |
| வலு மற்றும் நீர் வழங்கல் | 66,569 | 75,537 | 74,028 | 89,962 |
| போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் | 165,505 | 182,781 | 186,342 | 237,539 |
| ஏனையவை | 21,804 | 36,881 | 22,656 | 28,076 |
| ஏனையவை | 1 | 460 | 459 | 585 |
| குறைச் செலவினம் | - | -16,654 | - | -30,235 |
| **மொத்தச் செலவினம், கடன் வழங்கல்** | **1,293,613** | **1,430,701** | **1,414,122** | **1,605,367** |
| மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக | | | | |
| அரச பொதுப்பணிகள் | 4.5 | 4.4 | 4.2 | 3.9 |
| சமூகப் பணிகள் | 5.8 | 5.9 | 5.8 | 6.0 |
| பொருளாதாரப் பணிகள் | 6.5 | 6.8 | 6.1 | 6.7 |
| ஏனையவை | 6.4 | 5.6 | 5.5 | 5.1 |
| இதில் வீட்டில் கொடுப்பனவுகள் | 6.3 | 5.6 | 5.5 | 4.9 |
| மொத்தச் செலவினம், கடன் வழங்கல் | 23.1 | 22.6 | 21.6 | 21.4 |

மூலம் : நிதி, திட்டமிடல் அமைச்சு

உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் வெளிநாட்டு முதலீடுகள் உள்ளிட்ட வெளிநாட்டு வர்த்தகப் படுகடனின் உயர்ந்த பங்கு, 2010இல் 15 சதவீதத்தினால் அதிகரித்த வெளிநாட்டுப் படுகடன் இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இணைந்து 2011இல் வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவின் அதிகரிப்பிற்குப் பங்களித்தது.

**அரசின் ஏனைய பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவுகள் 2011இல் ரூ.113.7 பில்லியனுக்கு 29.6 சதவீதத்தினால் அதிகரித்தன.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக ஏனைய பொருட்கள் மற்றும் பணிகளின் மீதான செலவினம் 2010இன் 1.6 சதவீதத்திலிருந்து 2011இல் 1.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஏனைய பொருட்கள் மற்றும் பணிகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு வலு, பொது வசதிகள் மற்றும் மருத்துவ வழங்கல்கள் மீதான உயர்ந்த செலவினம் காரணமாக விளங்கியது. ஏனைய பொருட்கள் மற்றும் பணிகள் மீதான மத்திய அரசாங்கத்தினால் உறப்பட்ட செலவு, 2011இல் மற்றைய பொருட்கள் மற்றும் பணிகள் மீதான மொத்த செலவில் 47 சதவீதத்திற்கு வகைகூறியது.

**2011இல் நடைமுறை மாற்றல்களும் உதவுதொகைகளும் ரூ.216.6 பில்லியனுக்கு 10.4 சதவீதத்தினால் அதிகரித்த போதும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக இது 2010இன் 3.5 சதவீதத்திலிருந்து 2011இல் 3.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** குடியிருப்பாளர் தொடர்ந்தும் பாரிய நன்மைபெறுநர்களாக விளங்கி 2011இல் மொத்த நடைமுறை மாற்றல்களில் 79.1 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் அரச நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் 2011இன் மொத்த நடைமுறை மாற்றல்களில் முறையே 14.8 சதவீதத்திற்கும் 6.0 சதவீதத்திற்கும் வகைகூறின.

**2011இல் குடியிருப்பாளர்களுக்கான நடைமுறை மாற்றல்கள் ரூ.171.4 பில்லியனுக்கு 9.8 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஓய்வூதியங்கள் மற்றும் சமூக நலன்புரி கொடுப்பனவுகளின் மீதான அரச செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.** குடியிருப்பாளர்களுக்கான மாற்றல்களில் 58.3 சதவீதத்திற்கு வகைகூறும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் 2011இல் ரூ.99.9 பில்லியனுக்கு 9.8 சதவீதத்தினால் அதிகரித்தன. 2011 சனவரியிலிருந்து ஓய்வூதியம் பெறுவோருக்கான மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படி ரூ.300 இனால் மாதமொன்றிற்கு ரூ.2,675 இற்கு அதிகரிக்கப்பட்டமையும் 2010இல் புதிதாக சேர்ந்து கொண்ட 16,366 புதிய ஓய்வூதியம் பெறுவோரும் 2011இன் 23,447 புதிய ஓய்வூதியம் பெறுவோரும் ஒன்று சேர்ந்து இவ்வதிகரிப்பிற்கு பகுதியளவில் பங்களித்தனர். 2011இல் வளமாக்கி உதவுதொகை ரூ.29.8 பில்லியனுக்கு 14.5 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உலக சந்தையில் வளமாக்கி விலை அதிகரித்தமை முக்கிய காரணமாக இருந்ததுடன் இது யூரியா, முக்கூட்டுச் சிறப்பு பொசுப்பேற்று மற்றும் பொட்டாசியம் மூறியேட் என்பனவற்றைக் கொண்ட 50 கி.கிறாம் பொதிக்கான அரசாங்கத்தின் சராசரி உதவுதொகை ரூ.3,000 இனையும் விஞ்சிக் காணப்பட்டது. 2011 மே தொடக்கம் வளமாக்கி உதவுதொகை அனைத்துப் பயிர்களுக்கும் விரிவாக்கப்பட்டமையானது வளமாக்கி உதவுதொகை மீதான செலவினத்தினை மேலும் அதிகரித்தது. உடல் ஊனமுற்ற படைவீரர்களுக்கான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான செலவினம் 2010இன் ரூ.10.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2011இல் 13.3 பில்லியனாகக் காணப்பட்டது. அதேவேளை ஒட்டுமொத்த வறுமையில் ஏற்பட்ட குறைப்பினைப் பிரதிபலிக்கும் விதத்தில் வருமான துணைநிரப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு உரித்தான குடும்பங்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட படிப்பயான வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக சமுர்த்தி


நிகழ்ச்சித்திட்டத்தின் மீதான செலவினம் 2010இன் ரூ.9.2 பில்லியனிலிருந்து 2011இல் ரூ.9 பில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. இலவச பள்ளிக்கூட பாடப்புத்தகம் மற்றும் சீருடை விநியோகம் மற்றும் பள்ளிக்கூட ஊட்டச்சத்து உணவு நிகழ்ச்சித்திட்டம் போன்ற பள்ளிக்கூடப் பிள்ளைகளை இலக்காகக் கொண்ட நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மாற்றல் கொடுப்பனவுகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பிள்ளைகளின் ஊட்டச்சத்து நிலையினை உயர்த்துவதற்கான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மாற்றல் கொடுப்பனவுகள் என்பன 2011இல் ரூ.10.3 பில்லியனுக்கு 19 சதவீதத்தினால் அதிகரித்தன.

**அரச நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான நடைமுறை மாற்றல்கள் 2011இல் அதிகரித்தன.** இதன்படி, அரச நிறுவனங்களுக்கான நடைமுறை மாற்றல்கள் 2011இல் ரூ.32.2 பில்லியன்களுக்கு 16.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உயர் கல்வி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கான மாற்றல்கள் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். அரச கூட்டுத்தாபனங்களுக்கான நடைமுறை மாற்றல்கள் 2011இல் ரூ.13.0 பில்லியனுக்கு 5.2 சதவீதத்தினால் மிதமாக அதிகரித்தமைக்கு அஞ்சல் திணைக்களம் (ரூ.3.3 பில்லியன்) இலங்கை புகைவண்டித் திணைக்களம் (ரூ.4.1 பில்லியன்) இலங்கை போக்குவரத்துச் சபை (ரூ.3.9 பில்லியன்) என்பனவற்றிற்கான தொழிற்பாட்டு இழப்புக்களை ஈடுசெய்வதற்கான மாற்றல்களே காரணமாக இருந்தன. செலவினைப் பிரதிபலிக்கக் கூடிய விலையிடல் கொள்கையொன்று இல்லாமையும் தொழிற்பாட்டு வினைத்திறனின்மையும் இம்முக்கிய அரச தொழில் முயற்சிகளின் இழப்புக்களுக்கு முக்கிய காரணங்களாக விளங்கின.

**2011இல் மூலதன செலவினமும் தேறிய கடன் வழங்கலும் ரூ.393.5 பில்லியனுக்கு 14.7 சதவீதத்தினால் அதிகரித்து, பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்கு மிக அவசியமான முதலீடுகளை தொடர்வதற்கான அரசாங்கத்தின் கடப்பாடுகளைப் பிரதிபலித்தது.** 2011இல் அரச முதலீடுகள் ரூ.407.5 பில்லியனுக்கு 14.3 சதவீதத்தினால் அதிகரித்த போதும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக இது முன்னைய ஆண்டின் 6.4 சதவீதத்திலிருந்து 2011இல் 6.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2011இல் அரச முதலீடு, 2011இற்கான ஆரம்ப வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 6.5 சதவீதம் குறைவாக இருந்தமைக்கு முன்னுரிமையல்லாத மூலதனச் செலவினங்களை அரசாங்கம் மட்டுப்படுத்தியமை முக்கிய காரணமாக அமைந்தது. பொருளாதார அடிப்படையொன்றில் மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு மற்றும் நிலையான சொத்துக்களின் நிருமாணம் மற்றும் அபிவிருத்தி என்பனவற்றிற்காக அமைச்சுக்களினாலும் திணைக்களங்களினாலும் உறப்பட்ட செலவினம் 2011இல் ரூ.202.6 பில்லியனுக்கு 27.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. மீளாய்விற்குரிய காலப்பகுதியில் மூலதன மாற்றல்கள் ரூ.160.4 பில்லியனுக்கு 11.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு அரச கூட்டுத்தாபனங்கள் (31.2 சதவீதம்), மாகாண சபைகள் (14.6 சதவீதம்), அரச நிறுவனங்கள் (6.5 சதவீதம்) என்பனவற்றிற்கான அதிகரித்த மாற்றல்களே காரணமாகும். அதேவேளை, வர்த்தகம் சந்தை அரச தொழில்முயற்சிகளுக்கு வெளிநாட்டு நிதியங்கள் வழங்குகின்ற கடன் வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னைய ஆண்டின் ரூ.54.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2011இல் ரூ.44.5 பில்லியனுக்கு மட்டுப்படுத்தப்பட்டன.

**2011இல் தொடர்ந்து முக்கியமான தேசிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் தொடர்பாக, ஒன்று சேர்ந்த உத்வேகம் தொடர்ந்தும் காணப்பட்ட வேளையில் கிராமிய - நகர வேறுபாடுகளைக் குறைப்பதற்காக பல்வேறு பிரதேச மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.** தொழிற்பாட்டு அடிப்படையில், அரச பணிகளிலான அரச முதலீடுகள் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய கூறாக தொடர்ந்தும் இருந்ததுடன் 2011இன் மொத்த அரச முதலீட்டில் 76.5 சதவீதத்திற்கு வகைகூறியது. பெயரளவு நியதிகளில் இது 2011 இல் ரூ.311.6 பில்லியனாக விளங்கியதுடன் இது முன்னைய ஆண்டினை விட 11.8 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகக் காணப்பட்டது. வீதிகள், துறைமுகங்கள், வலு மற்றும் சக்தி, புகைவண்டி, நீர் வழங்கல் மற்றும் நீர்ப்பாசனம் என்பன 2011இல் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயற்றிட்டங்களாகக் காணப்பட்டன. தென்பகுதி நெடுஞ்சாலை மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் முதலாவது கட்டம் நிறைவடைந்தமையானது 2011இன் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் முக்கியமானதொரு மைல்கல்லாகும். அரசாங்கம் நாட்டிலுள்ள தேசிய மற்றும் பிரதேச வீதி வலையமைப்பினை அபிவிருத்தி செய்வதற்கு தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டது. இதன்படி, 2011இல் கொழும்பு - கட்டுநாயக்க விரைவுப்பாதை, வெளிச்சுற்று நெடுஞ்சாலைச்

வரைபடம் 6.3 தொழிற்பாடுகளின்படி மொத்தச் செலவினம் - 2011



செயற்றிட்டம், அம்பாந்தோட்டை பன்னாட்டு மைய அபிவிருத்திச் செயற்றிட்டத்திற்கான வீதி வலையமைப்பு அபிவிருத்தி, தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்திச் செயற்றிட்டம், வீதி மற்றும் பாலங்கள் செயற்றிட்டங்களின் பேணல், தேசிய நெடுஞ்சாலைத் துறைச் செயற்றிட்டம் மற்றும் வீதிகளை அகலப்படுத்தி மேம்படுத்தும் செயற்றிட்டம் என்பனவற்றின் மீது 2011இல் கணிசமான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன. துறைமுக அபிவிருத்தித் துறையில், குறிப்பிடத்தக்க முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன. துறைமுக அபிவிருத்தித் துறையில், குறிப்பிடத்தக்க முதலீடுகள் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நீர்க்கல வசதி அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் கொழும்பு துறைமுக விரிவாக்கச் செயற்றிட்டம் என்பனவற்றின் மீது குறிப்பிடத்தக்க முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன. 2011இல் வலு மற்றும் சக்தித் துறையில் மேல் கொத்மலை நீர் மின்வலு செயற்றிட்டம் மற்றும் லக்ஷபான மற்றும் விமலசுரேந்திர நீர் மின்வலுச் செயற்றிட்டம் புனரமைப்பு என்பனவற்றில் முக்கிய முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, குறிப்பிடத்தக்க முதலீடுகள், 2011இல் புகைவண்டிப் பாதைகளைத் தரமுயர்த்துவதில் முக்கியமாக, மடு - தலைமன்னார் பாதை (ரூ.5.4 பில்லியன்) ஓமந்தை - பளை வரையன பாதை (ரூ.5.3 பில்லியன்), மதவாச்சி - மடு பாதை (ரூ.4.2 பில்லியன்) மற்றும் கரையோரப் புகைவண்டிப் பாதை (ரூ.9.3 பில்லியன்) போன்ற வட, கிழக்கு மாகாணங்களின் செயற்றிட்டங்களின் மீது மேற்கொள்ளப்பட்டது. மேலும் நீர் வழங்கலை மேம்படுத்துவதற்கான முதலீடுகள் இரண்டாந்தர நகர கிராமிய சனசமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட நீர் வழங்கல் செயற்றிட்டம் மற்றும் பின் தங்கிய பிரதேசங்களில் ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டம் போன்ற செயற்றிட்டங்களூடாக முதலீடுகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் உமா ஓயா போன்ற முக்கிய நீர்ப்பாசன முறைகளின் கீழ் முதலீடுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன.

**கல்வி மற்றும் நலத் துறை மீதான உயர்ந்த செலவினத்தின் காரணமாக, 2011இல் சமூகப் பணிகள் மீதான அரச முதலீடுகள் ரூ.63.0 பில்லியனுக்கு 12.0 சதவீதத்தினால் அதிகரித்தன.** 2011இல் கல்வி மீதான முதலீடு 2011இல் ரூ.22.3 பில்லியனாக அமைந்து பள்ளிக்கூடங்களின் நிருமாணம் மற்றும் முன்னேற்றம் பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்பினை மேம்படுத்தல் உயர்தர தொழில்நுட்ப கல்வி மற்றும் இரண்டாந்தரக் கல்வியை நவீனப்படுத்தவும் மேற்கொள்ளப்பட்டது. 2011இல் ரூ.14.8 பில்லியனாக விளங்கிய நலத்துறை மீதான அரச முதலீடு வைத்தியசாலைகளின் நிருமாணம் மற்றும் மேம்பாடு, ஆய்வுகூடத்திற்குத் தேவையான பொருட்கள் மற்றும் உயிரின மருத்துவச் சாதனங்கள் மற்றும் தொற்று நோய்களைத் தடுக்கின்ற நிகழ்ச்சித்திட்டங்களில் முக்கியமாகக் காணப்பட்டது. அதேவேளை மீளாய்விற்குரிய காலப்பகுதியில் வீடமைப்பு மற்றும் சனசமூக பணிகளிலுள்ள முதலீடுகளும் மோதல்களினால் பாதிக்கப்பட்ட பிரதேச அவசர செயற்றிட்டம், அவசர வடக்கு மீட்புச் செயற்றிட்டம், வடக்கு கிழக்கு உள்ளூர் பணிகள் மேம்பாட்டுச் செயற்றிட்டம், வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்கட்டுமானச் செயற்றிட்டம், வடக்கு கிழக்கு கரையோர சனசமூக அபிவிருத்திச் செயற்றிட்டம், வடக்கு கிழக்கு சனசமூக நிலமைகளைப் புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் செயற்றிட்டம் என்பனவற்றின் மீது அதிகரிப்புக்களைக் காட்டின.

**அரசாங்கம், உட்கட்டமைப்பில் காணப்படும் தடைகளை அகற்றுவதில் அதற்குள்ள கடப்பாடுகளைத் தொடர்ந்தும் கொண்டிருந்ததுடன் மோதல்களினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள்கட்டுமான நடவடிக்கைகளில் விசேட வலியுறுத்தல்களையும் மேற்கொண்டது.** இதன்படி, ஏற்றத்தாழ்வற்ற பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்குடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. குறித்துரைக்கப்பட்ட மாகாண ரீதியான அபிவிருததி முன்னெடுப்புக்களை ஊக்குவிப்பதற்கென்றே வடிவமைக்கப்பட்ட பின்தங்கிய பிரதேசங்களில் செயற்றிட்டங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மீதான செலவினம் 2010இன் ரூ.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2011இல் ரூ.18.3 பில்லியனாகக் காணப்பட்டது. “கம நகும” நிகழ்ச்சித்திட்டத்தின் மீதான முதலீடுகள் 2011இல் ரூ.9.8 பில்லியனாகக் காணப்பட்டது. மேலும், நாட்டின் கிராமிய வீதி வலையமைப்பினை உயர்த்தும் நோக்குடன் 2011இலும் “மக நகும” நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. அதேவேளை, மோதலினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுச் செயற்றிட்டங்கள் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்கட்டுமான நிகழ்ச்சித்திட்டம் (ரூ.2.7 பில்லியன்), அவசரகால வடக்கு மீட்புச் செயற்றிட்டம் (ரூ.2.8 பில்லியன்), வட மாகாணச் செயற்றிட்டங்களிலுள்ள தேசிய வீதி வலையமைப்பினை மேம்படுத்துதல் (ரூ.15.1 பில்லியன்) போன்ற செயற்றிட்டங்களுக்கான முதலீடுகள் அதிகரிக்கப்பட்டதுடன் 2011இல் விரைவுபடுத்தப்பட்டன.

## முக்கிய இறை நிலுவைகள்

**இறைத் திரட்சிக்கான அரசாங்கத்தின் கடப்பாடுகள், 2010இன் மொ.உ.உற்பத்தியில் 8 சதவீதத்திலிருந்து 2011இன் மொ.உ.உற்பத்தியில் 6.9 சதவீதத்திற்கு குறைவடைந்த திரண்ட இறைப் பற்றாக்குறையில் பிரதிபலித்ததுடன் இப்பற்றாக்குறை ஆரம்ப வரவு செலவுத்திட்ட இலக்கான மொ.உ.உற்பத்தியின் 6.8 சதவீதத்திலும் பார்க்க சிறிதளவு உயர்வானதாகக் காணப்பட்டது.** அரசிறைச் சேகரிப்பில் வீழ்ச்சி காணப்பட்ட போதும் செலவினத்தில் மேற்கொள்ளப்பட்ட சிக்கனம் திரண்ட இறைப் பற்றாக்குறையினை ஆரம்ப இலக்கிடலுக்கு மிக அணித்தாகப் பேணுவதனை இயலச் செய்தது. இதையொத்த விதத்தில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையும் 2010இன் மொ.உ.உற்பத்தியின் 2.1 சதவீதத்திலிருந்து 2011இல் மொ.உ.உற்பத்தியின் 1.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு


மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட குறைப்பே முக்கிய காரணமாக இருந்தது. எனினும், இது வரவு செலவுத்திட்ட மதிப்பீடான மொ.உ.உற்பத்தியின் 0.8 சதவீதத்திலும் பார்க்க உயர்வாக இருந்தமைக்கு அரசிறையில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைந்த செலவினம் காணப்பட்டமையே காரணமாகும். ஆரம்ப பற்றாக்குறையும் 2010இன் மொ.உ.உற்பத்தியின் 1.7 சதவீதத்திலிருந்து 2011இன் மொ.உ.உற்பததியில் 1.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வரவு செலவுத்திட்ட மதிப்பீடான மொ.உ.உற்பத்தியின் 1.3 சதவீதத்திலும் பார்க்க சிறிதளவு உயர்வாக விளங்கி தொடரும் இறைத்திரட்சிச் செயற்பாட்டினை பிரதிபலித்தது.

## வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடல்

**2011இல் இறைப் பற்றாக்குறை முக்கியமாக உள்நாட்டு மூலங்களினூடாக நிதியிடப்பட்டது.** இதன்படி, மொத்த நிதியிடலில் உள்நாட்டு நிதியிடல் 51.4 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் வெளிநாட்டு மூலங்கள் எஞ்சிய 48.6 சதவீதத்திற்குப் பங்களித்தன. எனினும், பற்றாக்குறையினை நிதியிடுவதற்கு வெளிநாட்டு மூலங்களிலிருந்து கிடைத்த பங்களிப்பு ஆரம்ப மதிப்பீடுகளிலும் பார்க்க உயர்வாக இருந்த வேளையில் உள்நாட்டு நிதியிடல் 2011 வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைவானதாகக் காணப்பட்டது. இதன் விளைவாக, தேறிய வெளிநாட்டு நிதியிடல் ஆரம்ப மதிப்பீடான ரூ.143.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.219 பில்லியன் காணப்பட்ட வேளையில், தேறிய உள்நாட்டு நிதியிடல் ஆரம்ப மதிப்பீடான ரூ.290 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.231.2 பில்லியனாகக் காணப்பட்டது.

**உள்நாட்டு நிதியிடலின் உள்ளமைப்பினை பரிசீலிக்கையில் 2010இல் காணப்பட்ட வங்கித்தொழில் மூலங்களிலிருந்து வங்கியல்லா மூலங்களுக்கு நகர்ந்த தன்மை 2011இல் மாற்றமடைந்தது.** இதன் விளைவாக, 2011இல் வங்கித்தொழில் துறையிலிருந்தான தேறிய கடன்பாடுகள் ரூ.192 பில்லியன்களாக விளங்கி (தேறிய உள்நாட்டு நிதியிடலில் 83 சதவீதம்) ஆரம்ப மதிப்பீடாக ரூ.42 பில்லியன்களை விஞ்சியதுடன் 2010இல் தேறிய மீள்கொடுப்பனவுகள் ரூ.1.9 பில்லியனாகக் காணப்பட்டது. இதன்படி, வங்கியல்லாத் துறையிலிருந்தான கடன்பாடுகள் ரூ.39.4 பில்லியன்களாக விளங்கி ஆரம்ப வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட ரூ.248 பில்லியன்களிலும் பார்க்க குறிப்பிடத்தக்களவிற்கு குறைவாக இருந்தது. மொத்த வங்கி நிதியிடலில் மத்திய வங்கியிலிருந்தான கடன்பாடுகள் 97 சதவீதத்திற்கு வகைகூறி 2010இன் ரூ.32.1 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவுகளுடன் ஒப்பிடுகையில் ரூ.185.8 பில்லியன்களாக விளங்கியது. 2011இல் வரவு செலவுத்திட்டத்தினை நிதியிடுவதில் வங்கியல்லா நிதியிடலிலிருந்து வங்கி நிதியிடல் மூலங்களுக்கு நகர்ந்தமைக்கு மூன்றாம் காலாண்டு வரை அரச பிணையங்கள் சந்தையில் நிலவிய ஒப்பீட்டு ரீதியில் குறைந்த

வரைபடம் 6.4 பிரதான இறைக் குறிகாட்டிகள் (மொ.உ.உ.வின் சதவீதமாக)




வட்டி வீதங்களே காரணமாகும். இது உயர்ந்த வருவாயைத் தருகின்ற முதலீடுகளின் மாற்று மூலங்களைக் கண்டறிவதற்கு வங்கியல்லாத் துறையைத் தூண்டியது. எனினும், 2011இன் நான்காம் காலாண்டின் தொடக்கத்திலிருந்து உள்நாட்டுப் பணச் சந்தையின் இறுக்கமான ரூபாத் திரவத்தன்மை நிலைமைகளின் முக்கிய காரணமாக முதலாந்தரச் சந்தை விளைவு வீதங்கள் மேல் நோக்கி நகரத் தொடங்கின. இச்சந்தை அபிவிருத்திகள், முதலாந்தரச் சந்தையிலிருந்து மத்திய வங்கி அரச பிணையங்களைக் கொள்வனவு செய்வதனை அதிகரிப்பதற்கு வழிவகுத்தன. இது மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுடன் சேர்ந்து மத்திய வங்கியின் அரச பிணையங்களினது சொத்துடமையை 2010 இறுதியின் ரூ.2.1 பில்லியனிலிருந்து 2011 இறுதியில் ரூ.169.8 பில்லியனுக்கு அதிகரித்தது.

**வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடுவதற்கு அரசாங்கம் வர்த்தகப்படுத்தத்தக்க படுகடன் சாதனங்களிலேயே மிகக் கூடுதலாகத் தங்கியிருந்தது.** இதன்படி, சாதனங்கள்

அட்டவணை 6.5 உள்நாட்டு நிதியிடல் மூலங்கள்

ரூபா பில்லியன்


| விடயம் | 2008 | 2009 | 2010 | 2011 தற்காலிகமானவை |
|---|---|---|---|---|
| **கருவிகளின் படி** | **314.3** | **245.6** | **202.2** | **231.2** |
| திறைசேரி முறிகள் (அ) | 192.4 | 201.9 | 140.4 | 168.4 |
| திறைசேரி உண்டியல்கள் (ஆ) | 69.8 | 49.0 | 82.8 | 79.6 |
| ரூபாக் கடன்கள் | -1.5 | -17.7 | -24.6 | -25.7 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 65.5 | 7.6 | 11.1 | 5.3 |
| மத்திய வங்கி தற்காலிக முற்பணங்கள் | 15.6 | -2.4 | 4.0 | 16.9 |
| ஏனையவை | -27.5 | 7.1 | -11.5 | -13.3 |
| **மூலங்களின் படி** | **314.3** | **245.6** | **202.2** | **231.2** |
| வங்கி | 195.2 | 49.0 | -1.9 | 191.9 |
| வங்கியல்லா | 119.0 | 196.5 | 204.1 | 39.4 |

மூலங்கள் : நிதி, திட்டமிடல் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

(அ) 2007இலிருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் 2009இலிருந்து வெளிநாட்டில் வதியும் இலங்கையர்களுக்கும் மற்றும் வெளிநாட்டில் தொழில்புரிவோருக்கும் வழங்கப்பட்ட ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகள் நீங்கலாக

(ஆ) 2008இலிருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் 2009இலிருந்து வெளிநாட்டில் வதியும் இலங்கையர்களுக்கும் மற்றும் வெளிநாட்டில் தொழில்புரிவோருக்கும் வழங்கப்பட்ட ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் நீங்கலாக

வரைபடம் 6.5 பற்றாக்குறை நிதியிடல் (மொ.உ.உ.இன் சதவீதமாக)




வரைபடம் 6.6 வங்கி நிதியிடலின் மூலங்கள்




மூலமான தேறிய கடன்பாடு ரூ.227.5 பில்லியனாக விளங்கியது. இது திறைசேரி முறிகளின் மூலமான தேறிய கடன்பாடுகளான ரூ.168.4 பில்லியனையும் திறைசேரி உண்டியல்கள் மூலமான ரூ.79.6 பில்லியனையும் இலங்கை அபிவிருத்தி முறிகள் மூலமான ரூ.5.3 பில்லியனையும் உள்ளடக்கியிருந்த வேளையில் ரூ.25.7 பில்லியன் கொண்ட ரூபாக் கடன்களின் தேறிய மீள்கொடுப்பனவொன்று காணப்பட்டது. மற்றைய மூலங்களின் மூலமான தேறிய கடன்பாடுகள் ரூ.3.7 பில்லியன்களாகக் காணப்பட்டன. இது முக்கியமாக மத்திய வங்கியிலிருந்தான தற்காலிக முற்பணங்களையும் (ரூ.17 பில்லியன்) இறக்குமதிச் செலவுகளையும் (ரூ.2.3 பில்லியன்) உள்ளடக்கியிருந்தன.

**மூலவள இடைவெளியை நிரப்புவதற்கு, வரவு செலவுத்திட்டத்தில் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்கக் கூடுதலான அளவிளை வெளிநாட்டு மூலங்கள் வழங்கின.** வெளிநாட்டு மூலங்களிலிருந்தான மொத்தக் கடன்பாடுகள் ரூ.322.8 பில்லியன்களாக விளங்கிய வேளையில், இவ்வாண்டில் மொத்த தேறிய வெளிநாட்டு நிதியிடல் ரூ.219 பில்லியன்களாகக் காணப்பட்டன. மொத்தக் கடன்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூ.58.4 பில்லியனுடன் (17.8 சதவீதம்) ஒப்பிடுகையில் ரூ.61.5 பில்லியன் (19.1 சதவீதம்) கொண்ட சலுகை ரீதியான கடன்பாடுகளை உள்ளடக்கியிருந்த வேளையில் மீதி சலுகையல்லா மூலங்களிலிருந்து பெறப்பட்டன. மேலும், இருபுடை மற்றும் பல்புடை அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தான செயற்றிட்டக் கடன்கள் முன்னைய ஆண்டில் பெறப்பட்ட ரூ.163.9 பில்லியனுடன் (மொத்த வெளிநாட்டு நிதியிடலில் 50 சதவீதம்) ஒப்பிடுகையில் ரூ.174.5 பில்லியனாக (மொத்த வெளிநாட்டு நிதியிடலில் 54.1 சதவீதம்) காணப்பட்டன. ஆசிய அபிவிருத்தி வங்கி, யப்பான் மற்றும் சீனா என்பன செயற்றிட்ட நிதியிடலின் முக்கிய மூலங்களாகக் காணப்பட்டன. எனினும், மொத்த நிதியிடலில் தேறிய வெளிநாட்டு நிதியிடலின் பங்கு 2010இன் 54.7 சதவீதத்திலிருந்து 2011இல் 48.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. செயற்றிட்ட நிதியிடல் தவிர, தேறிய வெளிநாட்டு நிதியிடல் நாட்டிற்கான பன்னாட்டு முறிவழங்கலின் மூலமாகப் பெறப்படட ரூ.109.5 பில்லியனையும் (ஐ.அ.டொலர் 1 பில்லியன்) வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கும் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளிலிருந்தான முறையே ரூ.12.6 பில்லியன் மற்றும் ரூ.12.4 பில்லியன் கொண்ட தேறிய கடன்பாடுகளையும் உள்ளடக்கியிருந்தது. 2011இல் அரச பிணையங்களிலான வெளிநாட்டு முதலீடுகள் 2010இல் பெறப்பட்ட ரூ.48.9 பில்லியனை விட குறிப்பிடத்தக்களவிற்கு குறைவாக இருந்தமைக்கு, அரச பிணையங்களில் வெளிநாட்டவர்களின் முதலீட்டு வரையறை அடையப்பட்டமையே காரணமாகும்.

## 6.4 அரச படுகடனும் படுகடன் பணிக் கொடுப்பனவுகளும்

### அரச படுகடன்

**அரச படுகடன் உறுதித்தன்மையில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் முன்னேற்றங்கள் மொ.உ.உற்பத்தியின் வெளிநின்ற படுகடன் விகிதத்தில் பிரதிபலிக்கப்பட்டவாறு முன்னைய ஆண்டின் 81.9 சதவீதத்திலிருந்து 78.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** இறைத்திரட்சி முயற்சிகள் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியுடன் சேர்ந்து படுகடன் சுமை குறைவடைய பங்களித்த போதும் முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக ரூபா தேய்வடைந்தமையானது வெளிநின்ற படுகடன் இருப்பின் மீது எதிர்க்கணிய தாக்கத்தினைக் கொண்டிருந்தது. இதன்படி, 2011இல் உள்நாட்டுப் படுகடன் மொ.உ.உற்பத்தியின் 2.9 சதவீதத்தினால் மொ.உ.உற்பத்தியின் 42.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் வெளிநாட்டுப் படுகடன் மொ.உ.உற்பத்தியின் 0.5 சதவீதத்தினால் மொ.உ.உற்பத்தியின் 35.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பெயரளவு நியதிகளில் மொத்த வெளிநின்ற அரச படுகடன் 2011 இறுதியில் 11.8 சதவீதத்தினால் ரூ.5,133.4 பில்லியனுக்கு அதிகரித்தது.

மொத்த அரச படுகடனில் உள்நாட்டுப் படுகடனின் பங்கு **2010இன் 56 சதவீதத்திலிருந்து 2011இல் 54.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** இதற்கு ரூபாக் கடன்கள் உட்பட உயர்ந்த செலவினைக் கொண்ட உள்நாட்டுப் படுகடன்கள் சில மீள்கொடுப்பனவு செய்யப்பட்டமையே முக்கிய காரணமாகும். இதன்படி, மொத்த உள்நாட்டுப் படுகடன் இருப்பில் நடுத்தரத்திலிருந்து நீண்ட காலம் வரையான படுகடனின் பங்கு முன்னைய ஆண்டின் 76 சதவீதத்திலிருந்து 2011இல் 75 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. நடுத்தரத்திலிருந்து நீண்ட காலம் வரையிலான படுகடனில் முக்கியமானதொரு விகிதம் (86.4 சதவீதம்) திறைசேரி முறிகளை உள்ளடக்கியிருந்த வேளையில் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலம் வரையான படுகடனில் இலங்கை அபிவிருத்தி முறிகளும் ரூபாக் கடன்களும் முறையே 8.7 சதவீதத்திற்கும் 2.9 சதவீதத்திற்கும் வகைகூறின. குறுங்கால படுகடனில் திறைசேரி உண்டியல் 84.6 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் மத்திய வங்கியிலிருந்தான தற்காலிக முற்பணங்கள் குறுங்காலப் படுகடனில் 13.6 சதவீதத்திற்கு வகைகூறின.

**2011இல் காணப்பட்ட சந்தை அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் வங்கியல்லா துறை வசமிருந்த வெளிநின்ற படுகடன் இருப்பின் பங்கு முன்னைய ஆண்டின் 73 சதவீதத்திலிருந்து 68.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** இதற்கு, வங்கியல்லா துறை வசமிருந்து திறைசேரி உண்டியல் உடமைகள் ரூ.235.3 பில்லியனுக்கு 19.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். 2011 காலப்பகுதியில் நிலவிய அரச பிணையங்கள் மீதான குறைந்த விளைவு வீதங்கள் வங்கியல்லாத் துறையிலிருந்தனா அரச பிணையங்களுக்கான கேள்வியைக் குறைத்துவிட்டன. எனினும், திறைசேரி முறிகள் மூலமாக வங்கியல்லாத் துறைகளிலிருந்தான கடன்பாடுகள் 9 சதவீதத்தினால் ரூ.1,612.7 பில்லியனுக்கு அதிகரித்து வங்கியல்லா துறையினால் வைத்திருக்கப்பட்ட அரச படுகடனில் 2.3 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைத் தோற்றுவித்தது. வங்கியல்லா அரச துறையில் அரச படுகடனின் முக்கிய உடமையாளர்களாக ஊ.சே. நிதியமும் (49.6 சதவீதம்) தேசிய சேமிப்பு வங்கியும் (16.4 சதவீதம்) காணப்பட்டன.

**அட்டவணை 6.6** வெளிநின்ற அரச படுகடன் (ஆண்டு முடிவில் உள்ளவாறு)

ரூ.மில்லியன்


| விடயம் | 2008 | 2009 | 2010 | 2011 தற்காலிக மானவை |
|---|---|---|---|---|
| **மொத்த அரச படுகடன்** | **3,588,962** | **4,161,422** | **4,590,245** | **5,133,365** |
| **உள்நாட்டு படுகடன் (அ)** | **2,140,228** | **2,400,955** | **2,565,662** | **2,804,085** |
| முதிர்வுகாலத்தின்படி | | | | |
| குறுங்கால | 516,365 | 560,646 | 619,549 | 698,190 |
| நடுத்தர மற்றும் நீண்டகால | 1,623,863 | 1,840,309 | 1,946,113 | 2,105,895 |
| நிறுவனங்களின்படி | | | | |
| வங்கிகள் (ஆ) | 657,424 | 705,765 | 691,716 | 886,221 |
| வங்கியல்லாத்துறை | 1,482,704 | 1,695,089 | 1,873,845 | 1,917,864 |
| **வெளிநாட்டுக்கடன்** | **1,448,734** | **1,760,467** | **2,024,583** | **2,329,280** |
| வகைகளின்படி | | | | |
| சலுகைக் கடன்கள் | 1,227,222 | 1,271,142 | 1,266,910 | 1,328,797 |
| சலுகையற்ற கடன்கள் | 57,491 | 78,649 | 147,240 | 235,923 |
| வர்த்தக | 164,020 | 410,677 | 610,433 | 764,560 |
| நாணயத்தின்படி | | | | |
| சி.எ.உ | 531,849 | 567,502 | 572,354 | 601,691 |
| ஐ.அ.டொலர் | 280,435 | 330,842 | 476,490 | 678,983 |
| யப்பானிய யென் | 445,596 | 452,758 | 508,802 | 560,456 |
| யூரோ | 132,047 | 143,566 | 142,371 | 146,711 |
| ஏனையவை | 58,807 | 265,799 | 324,566 | 341,439 |
| குறிப்பு : செலாவணிவீத வேறுபாடுகள் | 58,807 | 23,114 | -4,653 | 85,573 |

(அ) இது கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் சார்பில் வர்த்தக வங்கிகளுக்கு 2003 நவம்பரில் வழங்கப்பட்ட ரூ.4,397 மில்லியன் கொண்ட அரசாங்க திறைசேரி முறிகளை உள்ளடக்கவில்லை.
(ஆ) கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளின் வெளிநின்ற மீதிகளை உள்ளடக்குகின்றது.


மூலங்கள் : நிதி, திட்டமிடல் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

**வங்கித்தொழில் துறையினால் வைத்திருக்கப்பட்ட அரச படுகடன் 2011இல் ரூ.886.2 பில்லியனுக்கு 28 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு அரச மூலவள இடைவெளியினை நிதியிடுவதற்கு வங்கித்தொழில் துறையிலிருந்தான மூலவளங்களின் மீது பெருமளவிற்கு தங்கியிருந்தமையே காரணமாகும்.** இதன் விளைவாக, மொத்த உள்நாட்டுப் படுகடனில் வங்கித்தொழில் துறைப் படுகடனின் பங்கு 2010இன் 27 சதவீதத்திலிருந்து 2011இல் 31.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. மத்திய வங்கி வசமிருந்த வெளிநாட்டுப் படுகடன் 2010இன் ரூ.78.4 பில்லியனிலிருந்து 2011இல் ரூ.263.3 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்த வேளையில் வங்கித்தொழில் துறையினால் வைத்திருக்கப்பட்ட மொத்த உள்நாட்டுப் படுகடனின் விகிதமாக அரச படுகடனின் மத்திய வங்கிச் சொத்துடமை முன்னைய ஆண்டின் 11.3 சதவீதத்திலிருந்து 2011இல். 29.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. 2011இல் மத்திய வங்கி வசமிருந்த படுகடனின் பெரும் பங்கு திறைசேரி உண்டியல்களை (64.5 சதவீதம்) உள்ளடக்கியிருந்த வேளையில் மீதிக்கு தற்காலிக முற்பணங்கள் வகைகூறின. திறைசேரி முறிகளின் உடைமைகளின் அதிகரிப்பு (27.3 சதவீதத்தினால்) மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளின் உடைமைகளின் அதிகரிப்புடன் (5.7 சதவீதத்தினால்) வர்த்தக வங்கிகளினால்


**வரைபடம் 6.7** வெளிநின்ற அரச படுகடன்



**வரைபடம் 6.8** வெளிநின்ற உள்நாட்டு படுகடனின் உள்ளடக்கம் - 2011




**வரைபடம் 6.9** வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் உள்ளடக்கம் - 2011





வைத்திருக்கப்பட்ட வெளிநின்ற அரச படுகடன் 2010 உடன் ஒப்பிடுகையில் ரூ.623 பில்லியனுக்கு 1.6 சதவீதத்தினால் சிறுதளவினால் மாத்திரம் அதிகரித்த வேளையில் திறைசேரி உண்டியல் உடமைகள் (15.7 சதவீதத்தினால்) முன்னைய ஆண்டிலிருந்தும் வீழ்ச்சியடைந்தன.

**வெளிநாட்டு நாணயததில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடன் 2010 இறுதியின் ரூ.190.5 பில்லியனிலிருந்து (ஐ.அ.டொலர் 1,717 மில்லியன்) 2011 இறுதியில் ரூ.201 பில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 1,764 மில்லியன்) அதிகரித்தது.** இது இலங்கை அபிவிருத்தி முறிகள் வழங்கப்பட்டமையினதும் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமையினதும் இணைந்த விளைவாகும். ரூ.60.2 பில்லியன் தொகை கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் ஆறு மாத இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதத்துடன் 365 இலிருந்து 390 வரையான வீச்சிலமைந்த அடிப்படைப் புள்ளிகளைக் கூட்டியதொரு விதத்தில் 3 இலிருந்து 5 ஆண்டுடன் வரையான முதிர்ச்சியுடன் வழங்கப்பட்ட வேளையில் வர்த்தக வங்கிகள் இலங்கை அபிவிருத்தி முறிகளின் முக்கிய முதலீட்டாளர்களாகக் காணப்பட்டனர். வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடன் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்தான ரூ.17.1 பில்லியன் (ஐ.அ.டொலர் 150 மில்லியன் ) கொண்ட வெளிநின் கடன்பாடுகளையும் ரூ.183.8 பில்லியன் (ஐ.அ.டொலர் 1,614 மில்லியன்) கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகளையும் உள்ளடக்கியிருந்தன.

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 2010இன் 36.1 சதவீதத்திலிருந்து 35.6 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்த வேளையில் பெயரளவு நியதிகளில் இது 2011இல் 15 சதவீதத்தினால் ரூ.2,329.3 பில்லியனுக்கு அதிகரித்தது.** சலுகையல்லா மூலங்களிலிருந்தான உயர் கடன்பாடுகள் மற்றும் ஆண்டின் இறுதிப்பகுதியில் முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமை என்பன வெளிநாட்டுப் படுகடன் இருப்பு அதிகரிக்க முக்கியமாகப் பங்களித்தன. சலுகையல்லாக் கடன்பாடுகள் ரூ.1,000.5 பில்லியனுக்கு 32 சதவீதத்தினால் அதிகரித்தமையின் மூலம் மொத்த வெளிநாட்டு நாணய இருப்பில் சலுகையல்லாப் படுகடனின் பங்கினை 2010இன் 37.4 சதவீதத்திலிருந்து 2011இல் 43 சதவீதத்திற்கு அதிகரித்தது. வர்த்தக கடன்பாடுகள் ரூ.764.6 பில்லியனுக்கு 25.2 சதவீதத்தினால் அதிகரித்தமை ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட நான்காவது நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் வழங்கப்பட்டமையே முக்கிய காரணமாகும்.

**முக்கியமான வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமையின் காரணமாக படுகடன் இருப்பு ரூ.85.6 பில்லியனால் (மொ.உ.உ. 1.3 சதவீதம்) அதிகரித்தது.** இலங்கை ரூபா இந்திய ரூபாவிற்கெதிராக 15 சதவீதத்தினாலும் யூரோவிற்கெதிராக 0.1 சதவீதத்தினாலும் உயர்வடைந்த வேளையில் யப்பானிய யென், ஐ.அ.டொலர் மற்றும் சிறப்பு எடுப்பனவு உரிமை என்பனவற்றிற்கெதிராக முறையே 7.2 சதவீதத்தினாலும் 2.6 சதவீதத்தினாலும்

**வரைபடம் 6.10** மொத்த வெளிநின்ற படுகடனின் நாணய உள்ளடக்கம் - 2011



2.3 சதவீதத்தினாலும் தேய்வடைந்தது. மேலும், மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் இருப்பு ஐ.அ.டொலர் (29.1 சதவீதம்), சிஎஉ (25.8 சதவீதம்), யப்பானிய யென் (24.1 சதவீதம்), யூரோ (6.3 சதவீதம்) மற்றும் இலங்கை ரூபா (11.6 சதவீதம்) மற்றும் ஏனைய நாணயங்கள் (3.1 சதவீதம்) என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. இதன் விளைவாக வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் இருப்பு, நாணய பெறுமதி வேறுபாடுகளின் காரணமாக ரூ.80.4 பில்லியனால் அதிகரித்தன. அதேநேரம் ஐ.அ. டொலரில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடன் (இலங்கை அபிவிருத்தி முறி மற்றும் வெளிநாட்டு வங்கித்தொழில் பிரிவு) ரூ.5.2 பில்லியனால் அதிகரித்தமைக்கு ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமையே காரணமாகும்.

## படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

**படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 2010 உடன் ஒப்பிடுகையில் 2011இல் ரூ.895.4 பில்லியனுக்கு ரூ.74.9 பில்லியனால் அதிகரித்தன.** கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ரூ.538.7 பில்லியனுக்கு ரூ.70.8 பில்லியனால் அதிகரித்து, மொத்தப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவில் 60.2 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் வட்டிக் கொடுப்பனவுகள் ரூ.356.7 பில்லியனுக்கு ரூ.4.1 பில்லியனால் அதிகரித்து மீதிக்கு வகைகூறியது. உள்நாட்டு மூலங்களுக்கான படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 2010இனை விட ரூ.728 பில்லியனுக்கு ரூ.41.2 பில்லியனால் அதிகரித்தன. இது முன்னைய ஆண்டினை விட ரூ.50.2 பில்லியனால் ரூ.440 பில்லியனுக்கு அதிகரித்த கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவினதும் ரூ.288.1 பில்லியனுக்கு ரூ.9 பில்லியனால் வீழ்ச்சியடைந்த வட்டிக் கொடுப்பனவினதும் இணைந்த விளைவாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சந்தையில் நிலவிய சாதகமான வட்டி வீதங்கள் 2011இல் வட்டிச் செலவுகள் குறைவடைய உதவிய வேளையில் ஒரே நேரத்தில் பெருமளவு படுகடன்கள் மீள்கொடுப்பனவு செய்யப்பட்டமையும் அதேபோன்று அரசின் பொதுப்படுகடன் முகாமைத்துவ உபாயத்திற்கிணங்க உயர்ந்த செலவினைக் கொண்ட சில உள்நாட்டுப் படுகடன்கள் மீள்கொடுப்பனவு செய்யப்பட்டமையும் இவ்வாண்டுப் பகுதியில் உள்நாட்டுப் படுகடன் தீர்ப்பனவுகள் கொடுப்பனவுகளை அதிகரித்தன. வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகளைப் பொறுத்தவரை கடன் தீர்ப்பனவு மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் இரண்டும் அதிகரித்தமைக்கு முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமையே முக்கிய காரணமாகும். இதன்படி, வெளிநாட்டுக் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ரூ.20.6 மில்லியனில் ரூ.98.8 பில்லியனுக்கு அதிகரித்த வேளையில் வெளிநாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் 2010 இலிருந்து ரூ.68.6 பில்லியனுக்கு ரூ.13.1 பில்லியனுக்கு அதிகரித்தன.

**அட்டவணை 6.7 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள்**


ரூ.மில்லியன்

| விடயம் | 2008 | 2009 | 2010 | 2011 தற்காலிக மானவை |
|---|---|---|---|---|
| **படுகடன் பணிக் கொடுப்பனவுகள்** | **592,804** | **825,687** | **820,448** | **895,382** |
| உள்நாடு | 440,918 | 675,274 | 686,800 | 728,028 |
| வெளிநாடு | 151,886 | 150,414 | 133,648 | 167,354 |
| **கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்** | **380,330** | **516,012** | **467,856** | **538,683** |
| உள்நாடு | 258,720 | 401,296 | 389,672 | 439,894 |
| வெளிநாடு | 121,609 | 114,716 | 78,184 | 98,789 |
| **வட்டிக் கொடுப்பனவுகள்** | **212,475** | **309,675** | **352,592** | **356,699** |
| உள்நாடு | 182,198 | 273,978 | 297,127 | 288,134 |
| குறுங்காலம் | 65,364 | 72,364 | 58,943 | 46,257 |
| நடுத்தர மற்றும் நீண்டகாலம் | 116,834 | 201,613 | 238,185 | 241,877 |
| வெளிநாடு | 30,277 | 35,698 | 55,464 | 68,565 |

மூலங்கள் : நிதி, திட்டமிடல் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

**உயர்ந்த பொருளாதார வளர்ச்சி மற்றும் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக 2011இல் படுகடன் பணிக் குறிகாட்டிகள் மேலும் மேம்பட்டன.** மொ.உ.உற்பத்திக்கான படுகடன் பணிக் கொடுப்பனவு விகிதம் 2010இன் 14.6 சதவீதத்திலிருந்து 2011இல் 13.7 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில், மொ.உ.உற்பத்திக்கான மொத்த வட்டி விகிதம் 2010இன் 6.3 சதவீதத்திலிருந்து 2011இல் 5.5 சதவீதத்திற்கும் மொ.உ.உற்பத்திக்கான உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் 2010 இன் 2011இல் 5.3 சதவீதத்திலிருந்து 2011இல் 4.4 சதவீதத்திற்கு மேம்பட்டன. மேலும், அரச அரசிறைக்கான படுகடன் பணிக் கொடுப்பனவு விகிதமும் 2010இன் 100.4 சதவீதத்திலிருந்து 2011இல் 95.8 சதவீதத்திற்கு மேம்பட்டமைக்கு 2011இன் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 9.1 சதவீதத்தினால் அதிகரித்தமையுடன் ஒப்பிடுகையில் அரசிறைச் சேகரிப்புக்கள் 14.4 சதவீதத்தினால் அதிகரித்தமையே காரணமாகும்.

**வரைபடம் 6.11 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (மொ.உ.உ.இன் சதவீதமாக)**



**அட்டவணை 6.8 அரசின் படுகடன் குறிகாட்டிகள்**

| குறிக்காட்டிகள் | 2008 | 2009 | 2010 | 2011 தற்காலிக மானவை |
|---|---|---|---|---|
| அரசின்படுகடன்/மொ.உ.உ | 81.4 | 86.2 | 81.9 | 78.5 |
| உள்நாட்டு படுகடன்/மொ.உ.உ | 48.5 | 49.8 | 45.8 | 42.9 |
| வெளிநாட்டு படுகடன்/மொ.உ.உ | 32.8 | 36.5 | 36.1 | 35.6 |
| மொத்த வெளிநாட்டு படுகடன்/ஏற்றுமதிகள்(அ) | 132.2 | 170.7 | 166.4 | 154.4 |
| மொத்தப்படுகடன் பணி/மொ.உ.உ | 13.4 | 17.1 | 14.6 | 13.7 |
| மொத்தப்படுகடன் பணி/ அரச அரசிறை (ஆ) | 90.5 | 118.0 | 100.4 | 95.8 |
| இதில் உள்நாட்டுப்படுகடன் பணி/ அரச அரசிறை (ஆ) | 67.3 | 96.5 | 84.0 | 77.9 |
| மொத்தப்படுகடன் பணி/ அரச செலவினம் (இ) | 43.1 | 48.1 | 46.9 | 46.2 |
| இதில் உள்நாட்டுப்படுகடன் பணி/ அரச செலவினம் (இ) | 32.0 | 39.3 | 39.3 | 37.6 |
| வெளிநாட்டு படுகடன் பணி/ஏற்றுமதிகள் (அ) | 13.9 | 14.6 | 10.7 | 11.1 |
| மொத்த வட்டி/மொ.உ.உ | 4.8 | 6.4 | 6.3 | 5.5 |
| உள்நாட்டு வட்டி/மொ.உ.உ | 4.1 | 5.3 | 5.3 | 4.4 |
| உள்நாட்டு வட்டி/அரச நடைமுறைச் செலவினம் | 24.5 | 31.1 | 31.7 | 28.6 |
| வெளிநாட்டு வட்டி /ஏற்றுமதிகள் (அ) | 2.8 | 3.5 | 4.4 | 4.5 |

(அ) பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள்
(ஆ) பொருளாதார வடிவமைப்பில் அரச வருமானம்
(இ) கடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளை உள்ளடக்கிய அரச செலவினம்

மூலங்கள் : நிதி, திட்டமிடல் அமைச்சு
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## 6.5 துணைத் தேசிய அரசாங்கங்களின் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள்

### துணைத் தேசிய அரசாங்கங்களின் கொள்கைப் பணிப்புரைகளும் வழிமுறைகளும்

**மாகாண சபைகளும் உள்ளூராட்சி மன்றங்களும் இலங்கையில் துணைத் தேசிய அரசாங்க முறைமையினை உருவாக்கியுள்ளன.** அரசியல் யாப்பிற்கான விதிகள் மூன்றாவது திருத்தத்தின் கீழ் ஒன்பது மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. 2011இல் ஐந்து புதிய உள்ளூராட்சி மன்றங்கள் சேர்க்கப்பட்டதுடன் உள்ளூராட்சி அமைப்பு முறைமை 2011 இறுதியில் 335 நிறுவனங்களை உள்ளடக்கியிருந்ததுடன் இவை 23 மாநகர சபைகள், 43 நகர சபைகள் மற்றும் 269 பிரதேச சபைகள் என்பனவற்றைக் கொண்டிருந்தன. இவ்வாண்டுப் பகுதியில், நான்கு உள்ளூராட்சி அதிகார சபைகள் மாநகர சபை அந்தஸ்திற்கு அல்லது நகர சபை அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்டன.

**உள்ளூராட்சி மன்றும் மாகாண சபைகள் அமைச்சு 2011ஆம் ஆண்டுப் பகுதியில் துணைத் தேசிய அரசாங்க மட்டத்தில் ஆளுகை மற்றும் அபிவிருத்தியில் முக்கியமானதொரு பங்கினைத் தொடர்ந்தும் ஆற்றியது.** அமைச்சு தொடர்ந்தும் துணைத் தேசிய மட்டத்தில் அதிகாரசபைகளுடன் நெருக்கமாகப் பணியாற்றிய வேளையில் மாகாண மட்டத்தில் அவற்றின் தேவைகளையும் காத்திரமான முறையில் பூர்த்தி செய்தது. இதன்படி, அமைச்சு காத்திரமான முறையில் கொடையாளர்களை இணைத்தல் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உயர்ந்த முகாமைத்துவம் மற்றும் சட்ட ரீதியான அபிவிருத்தி உதவிகளை வழங்குதல் என்பனவற்றினூடாக மாகாண மட்டங்களிலான முதலீடுகளுக்கு வசதிகளை வழங்கியது.

**துணை தேசிய அரசாங்க முறைமையினை வலுப்படுத்துவதற்காக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு பல்வேறு செயற்றிட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தியது.** 2011இல் உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டம், மாகாண சபைகள் கட்டளைச் சட்டம், நகர சபைகள் கட்டளைச் சட்டம், பிரதேச சபைச் சட்டம் என்பன திருத்தப்பட்ட வேளையில் மெற்றோபொலிட்டன் கூட்டுத்தாபனத்தினை நிறுவுவதற்கான வரைவு மசோதா வடிவமைக்கப்பட்டது. பின் தங்கியுள்ள உள்ளூராட்சி அதிகாரசபைகளின் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அமைச்சு “புற நகும” நிகழ்ச்சித்திட்டத்தினை வடிவமைத்தது. இது 2012 இலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவதற்கான நிலையிலுள்ளது. மேலும், கழிவு நீர் முகாமைத்துவ முறைமைகளைத் தரமுயர்த்துவதற்கான செயற்றிட்டங்களும் அனைத்து பதிலிறுப்பு வலையமைப்பும் தெரிந்தெடுக்கப்பட்ட பல மாகாணங்களிலும் நடைமுறைக்கிடப்பட்டன.

**2011இல் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் பிரதேச உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளின் கீழ் வீதி அபிவிருத்திக்கும் சிறிய மற்றும் நடுத்தர நகர அபிவிருத்திக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டது.** இதற்கமைய, மாகாண வீதிகளின் இணைப்புக்களையும் நம்பகத்தன்மையினையும் மேம்படுத்தும் நோக்குடன், மோதல்களினால் பாதிக்கப்பட்ட மாகாணங்களிலுள்ள வீதிகள் உட்பட மாகாண வீதிகள் அபிவிருத்திச் செயற்றிட்டத்தினை அமைச்சு நடைமுறைப்படுத்தியது. மேலும், குறிப்பாக வட மாகாணத்தின் போக்குவரத்து வலயமைப்பினை மேம்படுத்துவதற்காக வடபகுதி வீதி இணைப்புச் செயற்றிட்டங்கள் நடைமுறைக்கிடப்பட்டன. அதேவேளை, அமைச்சு சிறிய மற்றும் நடுத்தரளவு நகரங்களை விருத்தி செய்வதற்கான முன்னெடுப்புக்களை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. இவை தொடர்பான மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை நில மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனங்களின் நெருங்கிய ஒத்துழைப்புடன் விரைந்து நகரமயமாக்கப்பட்டு வருகின்றன.

**மாகாண சபைகள் 2011ஆம் ஆண்டிற்கான அவற்றின் வரவு செலவுத்திட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு அவற்றிற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து மாற்றல்களைச் செய்வதற்கு விதந்துரைக்கின்ற உபாய ரீதியான வகிபாகத்தினை நிதி ஆணைக்குழு தொடர்ந்தும் ஆற்றியது.** மூலவள ஒதுக்குகள் மீதான நிதி ஆணைக்குழுவின் விதந்துரைப்புக்களை பிராந்திய வேறுபாடுகளைக் குறைத்து அதன் மூலம் சமமானதொரு பிராந்திய வளர்ச்சியை எய்துவதாகவே இருந்தது. ஒதுக்கங்களை ஒழுங்குமுறைப்படுத்தி, மாகாணங்களுக்கு அரச மாற்றல்களை பங்கிட்டுக் கொடுக்கும் பொருட்டு 2011இலிருந்து நிதி ஆணைக்குழுவினால் புதிய அணுகுமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. மூலவள ஒதுக்கங்களை

இலகுபடுத்தவும் அதேபோன்று நடவடிக்கைகளைத் திட்டமிட்டு கண்காணிக்கவுமாக நான்கு முக்கிய துறைகளான (பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்தி, சமூக உட்கட்டமைப்பு மற்றும் பணிகளின் அபிவிருத்தி, உற்பத்தித்துறை அபிவிருத்தி, சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை எய்துவதற்கான சிறப்புச் செயற்றிட்டங்கள்) அடையாளம் காணப்பட்டன. அதேவேளை, நிதி ஆணைக்குழு பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு மீது அதன் முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. இது மாகாண சபைகளின் அனைத்து முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களும் முன் நிர்ணயிக்கப்பட்ட பங்கீடுகளின் மீது கவனம் செலுத்துவதனைத் தேவைப்படுத்துகின்றன. மேலும், நிதி ஆணைக்குழு மாகாணங்களுக்கிடையேயான இணைப்பாளர் மற்றும் வசதி ஏற்பாட்டாளர் என்ற அதன் முதன்மையான வகிபாகத்தினை தொடர்ந்தும் ஆற்றுகின்றது. இதன்படி, தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் உதவியுடன் ஆணைக் குழு செலவுச் சிக்கனமான கட்டுமான தொழில்நுட்பவியலை மாகாணங்களுக்கு அறிமுகப்படுத்தியது.

மாகாண சபைகளின் முக்கிய அரசிறை மூலமாக **விளங்கிய மொத்தப் புரள்வு வரி 2011ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் ஒழிக்கப்பட்டதுடன் மாகாண சபைகளின் அரசிறை மூலங்களில் அதற்கேற்ப மாற்றங்கள் செய்யப்பட்டன.** மத்திய அரசாங்கத்தினால் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து சேகரிக்கப்பட்ட அரசிறையில் மூன்றிலொரு பங்கு, முழுமையான முத்திரைத் தீர்வைச் சேகரிப்பு, உந்து ஊர்திகள் பதிவுக் கட்டணத்திலிருந்து உருவாக்கப்பட்ட அரசிறையில் 70 சதவீதம் என்பன மொத்தப் புரள்வு வரி நீக்கப்பட்டமையின் காரணமாக ஏற்பட்ட அரசிறை இழப்புக்களை ஈடுசெய்வதற்காக மாகாண சபைகளுக்கு மாற்றல் செய்யப்பட்டன. மத்திய அரசாங்கத்தினால் மாற்றல் செய்யப்பட்ட மொத்த தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் முத்திரைத் தீர்வையில் 48 சதவீதம் மேல் மாகாணத்திற்கும் தலா 9 சதவீதம் மத்திய, தெற்கு மற்றும் வடமேல் மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட வேளையில் தலா 5 சதவீதப் பங்கினை எஞ்சிய மாகாணங்கள் பெற்றன.

## மாகாண சபைகளின் வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகள்

**மாகாண சபைகளின் மொத்த அரசிறை சேகரிப்புக்கள் 2010இன் 24 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2011இல் ரூ.42.1 பில்லியனுக்கு 14.2 சதவீதத்தினால் அதிகரித்தன.** வரி அரசிறை 16 சதவீதத்தினால் ரூ.36 பில்லியனுக்கு அதிகரித்த வேளையில் வரியல்லா அரசிறை ரூ.6.1 பில்லியனுக்கு 4.7 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, அரசிறைகள் 2010இன் 0.7 சதவீதத்திலிருந்து 2011இல் 0.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. உரிமக் கட்டணங்கள் மற்றும் முத்திரைத் தீர்வைகளிலிருந்தான அரசிறை இம்மீளாய்விற்குரிய காலப்பகுதியில் அதிகரித்து, உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளில் காணப்பட்ட விரிவாக்கத்தினையும் உந்து ஊர்திகளின் பதிவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பினையும் பிரதிபலித்தன. மத்திய அரசாங்கத்திடமிருந்து மாற்றல் செய்யப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி 2011இல் ரூ.17.8 பில்லியனாக அமைந்து முன்னைய ஆண்டில் மாகாண சபைகளினால் சேகரிக்கப்பட்ட மொத்தப் புரள்வு வரியின் மொத்தத்தினை விட குறைவானதாகக் காணப்பட்டது. புதிய வரி முறைமை பூச்சிய வரியில் இருப்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக்கான வரித்தளத்தினை சில்லறை மற்றும் மொத்த விற்பனை வர்த்தகங்களின் பதிவுகளை விரைவுபடுத்துவதன் மூலம் விரிவுபடுத்த வேண்டும். அதேவேளை, மேல் மாகாணம் அரசிறை முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் விளங்கி 2011இல் மாகாண சபைகளின் மொத்த அரசிறைச் சேகரிப்பில் 54 சதவீதத்திற்கு வகைகூறியமைக்கு மேல் மாகாணத்தில் வியாபார தொழில்முயற்சிகள் பெருமளவிற்கு குவிந்திருந்தமையே காரணமாகும். மத்திய, தென் மற்றும் வடமேல் மாகாணங்கள் ஒவ்வொன்றும் மொத்த அரசிறைச் சேகரிப்பில் ஏறத்தாழ 9 சதவீதத்திற்கு வகைகூறின.

**மாகாண சபைகளின் மீண்டெழும் செலவினம் 2011இல் ரூ.126.8 பில்லியனுக்கு 6.4 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு சம்பளங்கள் மற்றும் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.** ஆண்டின் தொடக்கத்திலிருந்து அரச துறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட அடிப்படை சம்பளத்தில் 5 சதவீதத்திற்கு சமமான சிறப்புப் படியொன்று அறிமுகப்படுத்தப்பட்டமை மற்றும் அரச துறை ஊழியர்களின் மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன சம்பளங்கள் மற்றும் கூலிகள் அதிகரிப்பதற்குப் பங்களித்தன. 2011இல் தனியார் ஊதியங்கள், மாகாண

**அட்டவணை 6.9 மாகாண சபைகளுக்கான வரவு செலவுத்திட்ட வெளிப்பாடு**

ரூ.மில்லியன்

| விடயம் | 2008 | 2009 | 2010 | 2011 தற்காலிக மானவை |
|---|---|---|---|---|
| **மொத்த அரசிறை** | **31,368** | **29,433** | **36,474** | **42,065** |
| வரி அரசிறை | 25,992 | 24,907 | 30,825 | 36,014 |
| வரி அல்லா அரசிறை | 5,376 | 4,526 | 5,650 | 6,051 |
| **மொத்த செலவினம்** | **120,011** | **130,260** | **140,531** | **154,838** |
| நடைமுறைச் செலவினம் | 103,199 | 111,336 | 116,843 | 126,772 |
| இதில் தனிப்பட்ட ஊதியம் | 79,717 | 86,547 | 91,433 | 101,374 |
| மூலதனச் செலவினம் | 16,812 | 18,924 | 23,688 | 28,066 |
| **மத்திய அரச மாற்றல்கள்** | **88,942** | **93,999** | **107,032** | **115,856** |
| திரட்டிய கொடைகள் | 76,773 | 77,386 | 85.299 | 94,602 |
| பிரமாணங்களைஅடிப்படையாகக் கொண்ட கொடைகள் | 2,304 | 2.276 | 2,612 | 3,871 |
| அபிவிருத்திக் கொடைகள் (அ) | 7,262 | 10,945 | 11,683 | 9,409 |
| சிறப்புச் செயற்றிட்டங்களுக்கான பன்னாட்டுக் கொடைகள் | 2,603 | 3,393 | 7.439 | 7,973 |

(அ) குறித்துரைக்கப்பட்ட மாகாண அபிவிருத்திக் கொடைகள்

மூலங்கள் : மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

**சிறப்புக்குறிப்பு 12**

## ஐரோப்பாவின் நாட்டுக்கான படுகடன் நெருக்கடியின் தாக்கங்கள்

ஐரோப்பிய படுகடன் நெருக்கடி இப்பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுக்கும் அது போல் உலகின் ஏனைய பகுதிகளுக்கும் பரவுவது பற்றிய அதிகரித்த கரிசனைகள் காணப்படுகின்றன. கொள்கை நடவடிக்கைகள் சந்தைகளை மீள உறுதிப்படுத்தி பரவிச் செல்லும் சாத்தியத்தைத் தணிக்க முயற்சித்த போதிலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போதாமை பற்றியும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மிக மெதுவாகவே நடைமுறைப்படுத்தப்பட்டமை பற்றியும் பரவலான உடன்பாடு காணப்படுகிறது. ஐரோப்பிய நாடுகள் போட்டித்தன்மையை அதிகரிப்பதற்கும் அவற்றின் அரச நிதிகளின் நிலையை மேம்படுத்துவதற்கும் சில துணிச்சலான நடவடிக்கைகளை தற்போதும் எடுக்க வேண்டும்.

அதிகரித்துச் செல்லும் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் உலகச் சூழலில், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் ஐரோப்பிய வலய படுகடன் நெருக்கடியால் தொடர்ந்து பாதிக்கப்படாததாக இருக்கமாட்டாது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் வர்த்தகம் மற்றும் நிதியியல் வழிமுறைகளூடாக பாதிக்கப்படும் வேளையில், குறிப்பாக, ஐரோப்பிய பொருளாதாரங்களில் பெருமளவில் தங்கியிருக்கும் நாடுகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட இறை அளவைக் கொண்டுள்ள நாடுகள் ஏனைய நாடுகளை விட கூடிய இடர்நேர்வைக் கொண்டுள்ளன.

எளிதில் முறிவடையக் கூடிய நிதியியல் சந்தைகள் மற்றும் நலிவடைந்த முதலீட்டாளர் நம்பிக்கை என்பன முதலீட்டுப் பாய்ச்சல்களை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்குத் திருப்பியுள்ளன. எனவே, ஐரோப்பிய வலயத்திலான தொடர்ச்சியான பிரச்சனைகள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் கொடுகடன் வழிமுறைகளை இல்லாமல் செய்யலாம் அல்லது முதலீடுகளைத் தாமதப்படுத்தலாம் அல்லது இரத்துச் செய்யலாம். இத்துடன், ஐரோப்பிய அரசாங்கங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட கடுமையான வழிமுறைகள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் ஏற்றுமதிகளுக்கான கேள்வியை நலிவடையச் செய்யலாம்.

ஐரோப்பிய வலய படுகடன் நெருக்கடி முக்கியமாக வர்த்தகம், மூலதன உட்பாய்ச்சல்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான அதன் தாக்கத்தின் நியதிகளில் இலங்கைப் பொருளாதாரத்திற்கு தாக்கங்களைக் கொண்டுள்ளன. கிட்டத்தட்ட இலங்கை ஏற்றுமதிகளின் மூன்றிலொரு பகுதி ஐரோப்பிய ஒன்றியத்தை நோக்கி நெறிப்படுத்தப்பட்ட போதும் ஐக்கிய இராச்சியம் மற்றும் சேர்மனி போன்ற ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்கள் நெருக்கடியால் குறைவாக பாதிக்கப்பட்டமையால், இலங்கை ஏற்றுமதிகள் மீதான தாக்கம் குறைந்த மட்டத்திலேயே தொடர்ந்து காணப்படும். எனினும், வழமையான சந்தைகள் மீதான தங்கியிருப்பை குறைப்பதற்கு ஏற்றுமதிச் சந்தைகளையும் உற்பத்திகளையும் மாற்றுவதற்கான கொள்கை உத்வேகமாக மேற்கொள்ளப்படவேண்டும். ஐரோப்பாவிலான நலிவான நிதியியற் சந்தைகள் மற்றும் எதிர்மறையான முதலீட்டாளர் மனப்பாங்குகள் அபிவிருத்தியடைந்து வரும் சந்தைகளிலிருந்து ஓரளவு மூலதன வெளிப்பாய்ச்சல்களை ஏற்படுத்தியிருந்தாலும், இலங்கையைப் பொறுத்தமட்டில் இது காணப்படவில்லை. ஐரோப்பாவின் நலிவான பொருளாதார சூழல் தொழிலாளர் பணவனுப்பல்கள் வீழ்ச்சியடையச் செய்யக்கூடும். இலங்கைக்கான மொத்தத் தொழிலாளர் பணவனுப்பல்களில் ஐரோப்பாவிலிருந்தான பணவனுப்பல்கள் கிட்டத்தட்ட 17 சதவீதத்திற்கு மட்டுமே வகைகூறுவதால் தொழிலாளர் பணவனுப்பல்களின் பெறுகைகள் மீதான ஐரோப்பிய வலய நெருக்கடியின் தாக்கம் கணிசமாக இருக்கமாட்டதென எதிர்பார்க்கப்படுகிறது.

சபைகளின் மொத்த மீண்டெழும் செலவினத்தில் 80 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில், மீதிக்கு மற்றைய மீண்டெழும் செலவினங்கள் வகைகூறின. கல்வி மற்றும் நலத்துறைகளிலுள்ள சம்பளங்களும் கூலிகளும் மொத்த சம்பளச் செலவில் பெரும்பங்கிற்கு வகைகூறின. தொழிற்பாட்டு அடிப்படையில் சமூக உட்கட்டமைப்பில் முக்கியமாக கல்வி மற்றும் நலத் துறையின் மீதான நடைமுறைச் செலவினம் ரூ.112 பில்லியன்களாக அமைந்து மொத்த மீண்டெழும் செலவினத்தில் 88 சதவீதத்திற்கு வகைகூறியது. மேல் மாகாணம் தொடர்ந்தும் பாரிய செலவிடல் கூறாக விளங்கி மொத்த மீண்டெழும் செலவினத்தில் 22 சதவீதத்திற்கு வகைகூறியது.

**மாகாண சபைகளின் மொத்த மூலதனச் செலவினம் 2011இல் ரூ.28.1 பில்லியனுக்கு ரூ.6.6 சதவீதத்தினால் அதிகரித்தது.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக இது முன்னைய ஆண்டின் 0.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2011இல் 0.4 சதவீதமாக விளங்கியது. மாகாண ரீதியில் குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் 2011இன் மாகாண மட்ட முதலீடுகளில் முக்கியமானதொரு பங்கிற்கு வகைகூறி ரூ.9.4 பில்லியன்களாக விளங்கின. மேலும், ஓய்விற்குரிய காலப்பகுதியில் ரூ.8.0 பில்லியன் வெளிநாடுகளின் நிதியிடல் மூலமான செயற்றிட்டங்களில் செலவிடப்பட்டன. மாகாண வீதி அபிவிருத்திச் செயற்றிட்டம், கல்வித் துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் நலத் துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் என்பன 2011இல் மாகாண மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வெளிநாட்டு நிதியிடலைக் கொண்ட சிறப்பு செயற்றிட்டங்களில் முக்கியமானவைகளாக விளங்குகின்றன. கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டும் சமூக உட்கட்டமைப்பினை மேம்படுத்தும் பொருட்டும் ஆசிய அபிவிருததி வங்கி யப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பு முகவர் மற்றும் உலக வங்கி போன்ற பன்னாட்டு அபிவிருத்தி முகவராண்மைகள் தொடர்ந்தும் இச்செயற்றிட்டங்களுக்கு நிதியளித்து வருகின்றன. 2011இல் மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் ரூ.10.7 பில்லியனாக விளங்கியதுடன் முக்கியமாக மூலதனச் சொத்துக்களின் கையேற்பு மற்றும் மேம்பாடு மற்றும் மூலதன மாற்றல்கள் என்பனவற்றில் காணப்பட்டன.

**2011இல் மாகாண சபைகளுக்கான மத்திய அரசாங்கத்தின் மாற்றல்கள் 8.2 சதவீதத்தினால் ரூ.115.9 பில்லயன்களுக்கு அதிகரித்தன.** அரசிறையினைத் திரட்டுவதற்கு மாகாண

சபைகளுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையினால் மாகாண சபைகளின் செலவினத்தில் ஏறத்தாழ 75 சதவீதம் மத்திய அரசாங்கத்திலிருந்தான மாற்றல்களின் மூலம் நிதியிடப்படுகின்றது. தொகை வடிவிலான கொடைகள் மத்திய அரசாங்கத்தின் மாற்றல்களில் முக்கியமானதொரு வடிவமாக விளங்கி மொத்த மாற்றல்களில் 82 சதவீதத்திற்கு வகைகூறின. இதன்படி, மாகாண சபைகளின் நடைமுறைச் செலவின நிகழ்ச்சித்திட்டத்திலுள்ள மூலவள இடைவெளியினை பூர்த்தி செய்வதற்கு தொகை வடிவிலான கொடைகளின் கீழ் 2011இல் ரூ.94.6 பில்லியன்கள் மாற்றல் செய்யப்பட்டன. மேலும், குறித்துரைக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடங்குவதற்கான மாற்றல்கள் தற்றுணிபு ரீதியிலான செலவினத் தேவைப்பாட்டு நிதிக்கான பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்ட கொடைகள் மற்றும் சிறப்புச் செயற்றிட்டங்களுக்கான கொடைகள் என்பன முறையே ரூ.9.4 பில்லியனாகவும் ரூ.3.9 பில்லியனாகவும் ரூ.8.0 பில்லியனாகவும் காணப்பட்டன.